விலை ரூபா: 8.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 21 செவ்வாய்க்கிழமை (06.09.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 261

ராம்கோ
MADRAS CEMENTS LTD
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
RAMCO CEMENT
சீமெந்து

## சமாதான அனுசரணையாளர் பணியில் ஐ.நா. சபை ஒருபோதும் தலையிடாது

### ஐ.நா. பிரதிநிதி

(கொழும்பு)

நோர்வேயின் சமாதான அனுசரணைப் பணியை விலக்கி ஐ.நா. அதனை ஒரு போதும் முன்னெடுக்காது. அவ்வாறான நோக்கம் எதுவுமில்லை என இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐ.நா. சிறப்புத் தூதுவர் லக்டார் பிராக்மி தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் சமாதான அனுசரணை முயற்சிக்குப் பதிலாக ஐ.நாவை ஈடுபடுமாறு ஜனாதிபதி சந்திரிகா அழைப்பு விடுத்திருப்பதாக வெளியான செய்திகளையும் லக்டார் பிராக்மி மறுத்துள்ளார்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை தற்போது தோன்றியுள்ள நிலைமை தொடர்பாக ஆராய்வதற்காகவே ஐ.நா. சிறப்புத் தூதுவர் இலங்கை வந்துள்ளார்.

இருநாட்கள் தங்கியிருக்கும் இவர் ஜனா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவுக்கு 25 ஆயிரம் டொலர் வழங்க தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடவடிக்கை

அமெரிக்காவை தாக்கி ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொண்ட கத்ரீனா சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி உதவி வழங்குமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இணையத்தளம்மூலம் இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு அமெரிக்க மக்கள் அளித்த பாரிய உதவிகளை நினைவு கூரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தற்போது கத்ரீனால் பாதிக்கப்பட்ட அமெரிக்க மக்களுக்கு உதவுகிற வகையில் இந்த நிதி உதவியை அளிக்குமாறு கேட்டுகொண்டுள்ளது .

கத்ரீனா நிதி உதவியாக நாம் 25 ஆயிரம் முதல் 35 ஆயிரம் டொலர்வரை நிதி திரட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தீர்மானித்துள்ளதாகவும் அதன் தலைவர் வைத்தியர் ரஞ்சிதன் தெரிவித்துள்ளார்.

கத்ரீனாவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு 25 ஆயிரம் அமெரிக்க டொலரை அளிப்பதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-4)

# சி.சு.கட்சியின் வேட்பாளர் மகிந்தவுக்கு 12 நிபந்தனைகளுடன் ஜே.வி.பி ஆதரவு

## நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

(நமது நிருபர்)

**சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷவிற்கு பன்னிரண்டு நிபந்தனைகளுடன் ஆதரவளிப்பதாக ஜே.வி.பி நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.**

**இதுதொடர்பாக மகிந்த ராஜபக்ஷவுடன் ஒப்பந்தமொன்றையும் ஏற்படுத்தத் தீர்மானித்துள்ளது. இந்த ஒப்பந்தம் இன்னும் சில தினங்களில் கைச்சாத்திடப்படுமென்று கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஜே.வி.பி தெரிவித்துள்ளது.**

(10 ஆம் பக்கம் பார்க்க)



## முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடம் இன்று அவசரமாகக் கூடுகிறது

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது விசேட உயர்மட்டக் கூட்டத்தை இன்றும் நாளையும் கூட்டவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கூட்டத்துக்கு வடக்குக் கிழக்கு மாவட்டங்களின் கட்சி அமைப்பாளர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய மாவட்டங்களின் கட்சி முக்கியஸ்தர்கள் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் குறிப்பிட்ட முக்கிய நிபந்தனைகளின் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கே ஆதரவளிப்பது என்ற முடிவை முஸ்லிம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டிற்கு இராணுவச் சிப்பாய் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனைவீதி செங்கலடிச் சந்தியில் நேற்று மாலை 5 மணியளவில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொம்மாந்துறை இராணுவ முகாமில் கடமையாற்றும் குறிப்பிட்ட சிப்பாய் வழமை போல் வீதிக் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் இத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திலேயே உயிரிழந்த அவரது சடலம் ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியின் ஆதரவைப்பெற மகிந்தவுக்கு ஜனாதிபதி அனுமதி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்காக ஜே.வி.பி உட்பட எந்தக் கட்சியின் ஆதரவையும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பெறலாமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அனுமதியளித்துள்ளார். சீனாவிலிருந்து நாடு திரும்பியவுடன் இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தின்போது ஜனாதிபதி பொதுக் கட்டமைப்பை அமுல்படுத்துவதற்கான அத்தியாவசியம் பற்றியும் எடுத்துக் கூறினார். ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் பாராளுமன்றத்தைக் கலைக்கமாட்டேன் எனவும் உறுதியளித்தார்.

கட்சியின் ஆயுள்முடியும்வரை தான் கட்சித் தலைவராக இருப்பதற்கு விரும்பவில்லை என்றும், ஆனால் பாராளுமன்றம் விரும்பினால் தான் தொடர்ந்தும் இப்பதவியில் இருக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் தேர்தல் பிரசார அமைப்பு வேலைகள் அனைத்தும் தன்னுடையவழி நடத்தலிலேயே நடைபெறுமென ஜனாதிபதி தெரிவித்தார். (ச-6)

## பாணந்துறையில் குண்டுவெடிப்பு: இருவர் பலி: 9 பேர் காயம்

பாணந்துறையில் நேற்று பிற்பகல் நடைபெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். பாணந்துறை வேகட பிரதேசத்திலுள்ள வீடுமீது பிற்பகல் 3.15 மணியளவில் இனந்தெரியாத சிலர் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் இவர்கள் கொல்லப்பட் டுள்ளதுடன், 9 பேர் காயமடைந் துள்ளனர்.

முன்னர் நடந்த ஒரு கொலைச் சம்பவத்திற்குப் பழிவாங்கவே இத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ச-4)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349
011-2372952-3, 011-2360290, 011 - 2360291
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை..

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தெல்லிப்பழை துர்க்கை அம்மனுக்கு



### இன்று மூன்றாம் திருவிழா

### பாரெல்லாம் பணியும் தேவி

தார்மேவு மார்பன் சங்கரன் உடலில்
செம்பாதி தரித்த ஒளியே
பார்மேவு இமயப் பனிமேவு மலையில்
பாங்காய் வளர்ந்த கிளியே!
நீர்மேவு நெடுங்கடலில் நீள்துயில் கொண்ட
நெடுமால் உடன் பிறந்த பின்னோய்
சீர்மேவு தலங்கள் ஆறில் நின்றருளும்
செல்வக் குமரன் அன்னோய் சிறப்பினை
அருள்வாய்

மதுரகவி


## இராசி பலன்

**6.9.2005**
(ஆவணி 21, செவ்வாய்க்கிழமை)
திருதியை பின்னிரவு 4.13 மணிவரை
அத்தம் முன்னிரவு 11.02 மணிவரை
இராகுகாலம் 3.04 - 4.34 மணிவரை
சுபநேரம் 10.34 -12.04 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | காரிய அனுகூலம், சுவாரஸ்யம், நண்பர்கள் உதவி, போசன சுகம். |
| இடபம் | வியாபார நன்மை, ஆரோக்கியக் குறைவு, எடுத்த காரியம் கைகூடும், தனவிரயம். |
| மிதுனம் | ரோக நிலை, வீண்மனஸ்தாபம், மாதா சுகம், முயற்சி தாமதம். |
| கடகம் | உறவினர் உதவி, காரிய அனுகூலம், சுவாரஸ்யம், கூட்டுமுயற்சி. |
| சிங்கம் | விவாதம், அதிக செலவு, முயற்சி தாமதம், குடும்பக் கவலை. |
| கன்னி | கடின முயற்சி, உறவினர் வருகை, புதிய தகவல், சயனசுகக் குறைவு. |
| துலாம் | புதிய திருப்பம், வீண் அலைச்சல், சுப செலவு, உறவினர் மனஸ்தாபம். |
| விருச்சிகம் | உறவினர் வருகை, சுபகாரியம், போசன சுகம், வாக்கு மேன்மை. |
| தனுசு | அதிகாரம், கடினமுயற்சி, புதிய தகவல், போசன சுகம். |
| மகரம் | நிர்பபந்த நிலை, பிரயாணம், அதிக செலவு, உறவினர் சந்திப்பு. |
| கும்பம் | மரியாதைக்குறைவு, காரிய தடங்கல், ஆரோக்கியக் குறைவு, தனவிரயம். |
| மீனம் | எடுத்த காரியம் கைகூடும், செல்வாக்கு, பொருள்சேர்க்கை, உற்சாகம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# அன்புள்ள அம்மா!

## வைத்திய கலாநிதி சி.நவநீதன்

### தாயாக தயாராகுங்கள்

மழலைச் செல்வம். உங்கள் வாழ்வின் விலை மதிப்பற்ற செல்வத்தை வரவேற்க தயாராகுங்கள். வானுயரக் கட்டடத்திற்கு அதன் அத்திவாரம் எவ்வளவு முக்கியமோ அதுபோல் உங்கள் குழந்தை உருவாகுவதற்கு பாதுகாப்பான சூழலைக் கொடுப்பது முக்கியமும் உங்கள் கடமையுமாகும் உங்கள் குழந்தை கருத்தரிப்ப தற்கு 3 மாதங் களுக்கு முன்னரே கவனங்கள் செலுத்துவது சாலச் சிறந்ததாகும்.

### திருமணமாகி எவ்வளவு நாட்களில் கருத்தரிக்கும்?

பெரும்பாலான தம்பதியினர் (70%) முதல் வருடத்திலேயே கருத்தரிக்கின்றனர். 10-15 வீதமானோர் முதல் மாதத்திலேயே கருத்தரிப்பதுண்டு. 2 வருடங்களுக்கு மேலாக கருத்தரிக்காமல் இருப்போர் குழந்தைப் பேறு வேண்டின் மருத்துவ ஆலோசனை பெறுதல் அவ்சியம்.

(1) கருத்தரிக்க முன்னர் எடுக்க வேண்டிய கவனங்கள் என்ன?

குடும்பக்கட்டுப்பாட்டு வில்லைகளைப் பாவிப்போர் (Pill) அதனை 3 மாதங்களுக்கு முன்னரே நிறுத்தி, 3 மாதங் களுக்கு பாதுகாப்பு உறை (ஆணுறை, பெண் ணுறை) (Condoms) களைப் பாவிப்பது, மாதவிலக்கு வட்டம் சீரடைய வழி செய்யும்.

(2) ருபெல்லா ஊசி (Rubella vaccines)

ருபெல்லா என்பது குழந்தைகளை கருவிலே பாதித்து அங்க வீனமடையச் செய்யும் ஒரு கொடிய வைரசுக் கிருமியாகும். உடலில் ருபெல்லா எதிர்ப்புச்சக்தியற்றோர் இதனை ருபெல்லா வக் சீன் மூலம் தடுக்க முடியும். நீங்கள் இந்த வக்சனை முன்பு பெற்றிரா விடின் இது தொடர்பாக உங்கள் வைத்தியரை அனுகவும். ருபெல்லா ஊசி போட்ட பின்னர் 3 மாதங்களுக்கு கருத்தரித்தல் கூடாது. ஏனெனில் இது மிக அரிதாக குழந்தையை பாதிக்கும் சாத்தியம் உள்ளது.

(3) இயலுமான வரை மருந்து வகைகளை தவிர்க்கவும்.

நீங்கள் வேறு ஏதாவது நோய் களுக்குட்பட்டிருந்தால் உங்கள் வைத்தியரிடம் நீங்கள் குழந்தை பெறுவதற்கு திட்டமிடுவதைக்கூறி ஆலோசனைகளைப் பெறுங்கள். பின்வரும் நோய்கள் மகப்பேற்றுக் காலத்தில் விசேட கவனம் செலுத் தப்படவேண்டியன.

1. இருதய நோய்கள்
2. சலரோகம்
3. காக்கை வலிப்பு

(4) உங்கள் குடும்பத்தில் ஏதாவது பரம்பரை வியாதிகள் இருப் பின் இவை உங்கள் குழந்தையையும் பாதிக்கும் சாத்தியக்கூறுகள் இருக்கக்கூடும். இதுபற்றி உங்கள் வைத்தியருடன் ஆலோசியுங்கள்.

(5) 3 மாதங்களுக்கு முன்னிருந்தே போலிக்கமிலம் (Folic Acid) என்னும் விற்றமின் சத்தை பாவிக்க தொடங்குங்கள். இது உங்கள் குழந்தை அங்கவீனமாகப் பிறப்பதைத் தவிர்க்கும்.

(தொடரும்)

இது அறிவியல் யுகம். எல்லா விடயங்களையும் எல்லோரும் அறிந்திருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படும் காலம். பாடசாலை மாணவர் மட்டத்திலேயே பாலியல் பற்றி வகுப்புகள் நடாத்தப்படும் காலம். இந்த நவீன காலத்திலே கூட ஏராளமான பெண்கள், தாய்மார்கள், கப்பிணிப்பெண்கள் கர்ப்பம், பிரசவம் இக் காலங்களில் நடந்துகொள்ள வேண்டிய, கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றிய அறிவற்றவர்களாகவே காணப்படுகிறார்கள். கர்ப்பம் தரித்தல், பிரசவம் என்பன பேசப்படத் தகாதன என்று எண்ணுபவர்களும் உண்டு. பிரசவம் மறு பிறப்பு. செத்துப் பிழைகக்கும் பிறப்பு என இளம் தாய்மார்களின் உள்ளத்தில் பயத்தை விதைக்கும் பெண்களும் இருக்கிறார்கள். கர்ப்பம், பிரசவம் என்பன மனிதவாழ்வில் இடம்பெறும் இனிய நிகழ்வு என்பதை மறந்துவிடுகிறார்கள். இது சம்பந்தமாக ஆங்கில மொழியில் ஆயிரக்கணக்கான நூல்கள் வெளிவந்துள்ள போதிலும் தமிழில் வெளிவந்தவை மிகச் சிலவே. இக்குறைபாட்டினை நிவர்த்தி செய்யுமுகாக யாழ். போதனா வைத்தியசாலை, யாழ். ஹோலிகுரஸ் வைத்தியசாலை பெண்ணோயியல் நிபுணரும், யாழ். பல்கலைக் கழக பகுதிநேர விரிவுரையாளருமான வைத்திய கலாநிதி சி. நவ நீதன் MBBS(Jaf), MSOG (SL) MRCOG (U.K) DOWH (IRE) அவர்களது "அன்புள்ள அம்மா" என்ற அரிய நூலை வாசியுங்கள்.

## வடபகுதி கடற்பரப்பில் இந்திய மீனவர் அத்துமீறல்

இந்திய மீனவர்கள் வடபகுதி கடற்பரப்பில் தினமும் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுப்பது மிக அவசியமாகும். இவ்விடயம் தொடராகவே நடக்கிறது. இவ்விடயத்தல் மீனவர்கள் அனைவரையும் அணிதிரட்டி வடமராட்சி கடற்தொழிலாளர் சமாசம் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவேண்டும். சமாசம் இதற்கான ஏற்பாட்டை செய்தால் தாங்கள் அனைவரும் போராட்டத்தில் ஈடுபடத் தயாராகவுள்ளதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (அ-43,35)

## தென்மராட்சியில் 335 வீடுகளை உலக வங்கி நிர்மாணிக்கும்

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் உலக வங்கியின் நிதியுதவியுடன் மொத்தமாக 335 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இவற்றில் மட்டுவில் கிழக்கு, மட்டுவில் வடக்கு, சந்திரபுரம், மட்டுவில் தெற்கு, மந்துவில் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகள் மொத்தமாக 125வீடுகளும், அதியுயர் பாதுகாப்பு வலயம் அமைந்திருக்கும் பகுதிகளில் 150 வீடுகளும் ஏனைய 60 வீடுகள வீடமைப்புத் திட்டங்கள் அமைந்துள்ள பகுதிகளிலும் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதேசமயம் மட்டுவில் பகுதிகள் மற்றும் மந்துவில் பகுதிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 125 வீடுகளுக்கான உலக வங்கியின் கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட நிலையில் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ற-16)

## சுற்றாடல் செய்தி

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவினால் வெளியிடப்படும் "சுற்றாடல் செய்தி" என்னும் சஞ்சிகை யாழ்.குடாநாட்டிலுள்ள உள்ளூராட்சி திணைக்களத்தின் கீழ் இயங்கும் மாநகரசபை நகரசபை, பிரதேச சபை மற்றும் பொதுநூலகங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இச் சஞ்சிகை மும்மொழிகளிலும் அச்சிட்டு வெளியிடப்படவுள்ளது. பிரதேச மக்களிடையே சுற்றாடல் விழிப்புணர்வை ஏற்படுத்தி சுற்றாடலை பாதுகாத்துக்கொள்ள இது உதவுமென சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (த-35)

## கைக்குண்டு வீச்சில் சிறுவன் காயம்

மட்டக்களப்பு நகரப் பகுதியில் அமைந்துள்ள காகிரா நலன்புரிமுகாம் மீது இனந்தெரியாத நபர்கள் நேற்று முன்தினம் மாலை 5.45 அளவில் நடாத்திய கைக்குண்டுத் தாக்குதலில் ஒரு சிறுவன் காயமடைந்துள்ளார்.

மாமாங்கம் 1ஆம் குறுக்குத்தெரு வீதியைச் சேர்ந்த நடேசலிங்கம் கிருஷ்ணகாந்த (வயது-15) என்ற சிறுவனே இச்சம்பவத்தில் காயமடைந்தவராவார். இவர் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-8)

## சுகாதாரத் தொழிலாளர்களுக்கு சூரிய மின்கலம் மூலம் மின்சாரம்

(மருதங்கேணி)

பருத்தித்துறை கற்கோவளம் புனிதநகர் பகுதியில் குடியேறிய சுகாதார தொழிலாளர்களின் வீடுகளுக்கு சூரிய மின்கலம் மூலம் மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

புனிதநகரிலுள்ள 48 வீடுகளுக்கும் தலா ஒரு சூரிய மின்கலமும் அதிலிருந்து மின் ஒளியைப் பெற்றுக்கொள்ள இரண்டு மின்குமிழ்களும் சர்வோதய அமைப்பினால் பொருத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

சிறுவர் பர்துகாப்பு நிதியம் 48 வீடுகளுக்கான சூரியமின்கலங்கள் மற்றும் மின் குழிழ்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-35)

## மீண்டும் இயங்குகிறது "வார்ட்"

கைதடியிலுள்ள சித்த ஆயுள் வேத வைத்தியசாலையில் நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் வார்ட் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த கால யுத்தம் காரணமாக சேதமடைந்த இவ் வைத்தியசாலை நீண்டகாலம் மூடப்பட்டிருந்தது. பின்னர் கடந்த வருடம் தொடக்கம் இவ் வைத்தியசாலை மீள ஆரம்பிக்கப்பட்டு வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவு இயங்கி வந்தது. இப்போது இவ் வைத்திய சாலையில் நோயாளர்களுக்கான விடுதியில் தங்கி நின்று சிகிச்சை பெறும் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, யாழ்.குடாநாட்டிலுள்ள மாநகரசபை, நகரசபை, பிரதேச சபைகளில் இயங்கும் ஆயுள் வேத வைத்தியசாலையில் சிகிச்சை பெற வரும் நோயாளர்களை தங்கவைத்து சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய நோயாளர்களை அந்தந்த ஆயுள்வேத வைத்தியசாலை வைத்திய அதிகாரிகளின் சிபார்சு கடிதத்துடன் அனுப் பிவைக்குமாறு கைதடி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை பொறுப்பதிகாரி கேட்டுள்ளார். (த-35)

## இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் இரு வேட்பாளரதும் நிலை என்ன

### -சிவாஜிலிங்கம் எம்.பி

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டு இருவாரங்களுள் இரு பிரதான கட்சிகளின வேட்பாளர்களும் தமிழ்த் தேசியப் பிரச்சினை தொடர்பான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரி வித்துள்ளார்.

இரு பிரதான வேட்பாளர்களும் அவ்வாறு செய்யவில்லையெனில் தங்கள் கட்சி தனியொரு வேட்பாளரை நிறுத்தவோ அல்லது தேர்தலை புறக்கணிக்குமாறு தமிழ் மக்களுக்கு கூறவே வேண்டியேற்படும். இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் இரு பரதான வேட்பாளர்களும் இதுவரை அவர்களின் தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. வடக்கு -கிழக்கு மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அவ்விருவரும் இதுதொடர்பில் உடனடியாக முடிவெடுக்க வேண்டும். இனப்பிரச்சினைக்கான தீர்வு பேச்சுவார்த்தைகள் மூலம் எட்டப் படுமாயின் அது எந்த அப்படையில் என்பதை விவரித்து அவர்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் எனவும அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (ற-4)

# இலண்டன் மாநகரில்...

## ஓர் அனுபவப் பகிர்வு

## இலண்டன் மாநகரில் இந்துக் கோவில்களின் எழுச்சி

**செவ்வி**
**யதார்த்திகன்**



பொ.கமலநாதன்
அதிபர், கொக்குவில் இந்துக்கல்லூரி.

(நேற்றைய தொடர்ச்சி...)

*கேள்வி: மாணவர்களைக் கட்டுப்படுத்தும் வகையில் மாணவர்கள் மீது ஆசிரியர்களின் நடவடிக்கைகள், எவ்வாறு காணப்படுகின்றன?*

பதில்: ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்குவது அங்கு அறவே இல்லை. மாணவர்களின் சுதந்திரத்தில் ஆசிரியர்கள் தலையிடுவதில்லை. மாணவர்களின் ஆர்வத்தினைப் பொறுத்து ஆசிரியர்கள் வழிகாட்டுவார்கள். பிள்ளைகள் கற்க விரும்பவில்லை எனில் அவர்கள் விரும்பும் வகையில் கல்வியை தொடர வகை செய்யப்படுகின்றது.

*கேள்வி: அங்கே காணப்படும் பரீட்சை முறைகள் பற்றிக் கூறுங்களேன்?*


பதில்: இங்கு தற்போது நடைமுறையிலுள்ள கணிப்பீட்டு முறைகள் அங்கு வழமையானவை. இங்குள்ள ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை போன்ற ஒரு பரீட்சை ஒத்த வயதினருக்கு நிகழ்த்தப்படுகின்றது. இப் பரீட்சைப்பெறுபேறானது ஹிண்டர் கார்டின் இலிருந்து கிரம்மர் ஸ்கூலுக்கு செல்ல உதவுகின்றது. அதாவது இங்கு கல்லூரி அனுமதியில் புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் உதவுகிறது போல அங்கு அப் பரீட்சை அமைகிறது. எனவே அப்பரீட்சையும் ஒரு போட்டிப் பரீட்சையாக அமைகிறது. மற்றும் சாதாரண தரம், உயர்தரம் போன்ற எமது பரீட்சைமுறைகளும் அங்கு காணப்படுகின்றது.

*கேள்வி: இங்கு மாணவர்கள் மத்தியில் தனியார் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்புகள செல்வாக்கு செலுத்துவது போன்ற நிலை அங்கு உள்ளதா?*

பதில்: அங்கேயும் ரியூசன் எனும முறை வந்துவிட்டது. பிரத்தியேக வகுப்புகள் கூட காணப்படுகின்றன. ஆனால் இங்குள்ளது போல 300-400 மாணவர்களைக் கொண்ட தனியார் கல்வி நிறுவன வகுப்புகள் காணப்படவில்லை. மாணவர்கள் சிறு சிறு குழுக்களாக இணைந்து ஆசிரியர்கள் மூலம் கற்றல் செயறபாடுகளில் ஈடுபடுகிறார்கள். அங்கேயும் எமது தமிழ்ப் பிள்ளைகளுக்கு ரியூசன் கொடுக்கும் நிலை காணப்படுகின்றது.

*கேள்வி: இலங்கை கல்விமுறையிலே நன்கு பார்ட்சயமான தங்களுடைய பார்வையில் பிரித்தானிய கல்வி முறையிலுள்ள எந்தச் சிறப்பியல்புகளை எமது கல்விமுறைகளுக்குள் புகுத்துவது எமக்கு நன்மை தரும் என எண்ணுகின்றீர்கள்?*

பதில்: மிகச் சிறிய வயதிலேயே பிள்ளைகள் எத்துறையில் கல்வி கற்க விரும்புகிறாகளோ அத்துறையில் அவர்களை வழிப்படுத்தும் முறை அங்கு இருக்கின்றது. இந்த நிலையினை இங்கு காணமுடியாது. பெரும் பாலான பெற்றோர்களின் விருபபினையே பிள்ளைகள் பூர்த்தி செய்ய வேண்டிய நிலை இங்கு இருக்கின் றது. இதனால் பிள்ளைகள் பலர் தமக்குரிய நல்ல துறைகளை தவறவிடுகின்றாகள்.



அடுத்து பௌதிக வளங்களைக் கூறலாம். அங்குள்ள பாட்சாலைகளில் சகல வசதிகளும் மாணவர்களுக்குப் போதியளவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வசதிகளை வளரும் நாடான எம் நாட்டில ஏற்படுத்தித் தருவார்கள் என்பதை நாம் எதிர்பார்க்க முடியாது.

இங்கிலாந்திலே உயர்கல்வி கிடைக்காத மாணவர்கள் உடனடியாக தொழிற்கல்விகளைக் கறறுக் கொள்கிறார்கள். அங்கு யாரையும் நீங்கள் என்ன தொழில் செய்கிறீர்கள் எனக் கேட்கும் வழக்கம இல்லை. இங்குள்ள மாணவர்கள் தொழில்நுட்பக் கல்லூரி போன்றவற்றில் தொழிற்கல்விகளைக் கற்கத் தம்மைத் தயார்படுத்தவேண்டும்.

எங்கட பிள்ளைகள் தகுந்த வேலைகளைப் பெற மிகுந்த பிரயத்தனம் எடுக்கவேண்டிய காரணம் அங்கே வேலைவாய்ப்புகள் வழங்கும்போது கறுப்பு இனத்தவர்களைவிட வெள்ளை இனத்தவருக்கே முன்னுரிமை வழங்கப்படுவதாக அறிந்தேன்.

*கேள்வி: இங்கிருந்து சென்ற இந்துக்கள் அங்கே கோவில்களினை அமைத்து வழிபாடுகளை நிகழ்த்தி வருகிறார்கள் என அறிகின்றோம், அத்தகைய செயற்பாடுகளைப் பற்றி தங்களின் கருத்து யாது?*

பதில்: அங்கே உள்ள அனேகமான இந்துக் கோவில்கள் முன்பு கிறிஸ்தவ தேவாலயங் களாக இருந்த இடங்களிலேயே அமைக்கப்பட்டுள்ளன. அதாவது பழைய கிறிஸ்தவ தேவாலயங் களினை இடிக்காது உட்புறத்தில் மாற்றங்களைச் செய்து இந்துக கோவில்களாக்கியுள்ளனர்.

பெரும்பாலான கிறிஸ்தவ தேவாலயங்கள் அங்கே விற்கப்படுகின்றன. ஏனெனில் அங்குள்ள மக்கள் தேவாலயங்களிற்கு செல்வது மிகமிகக் குறைவாகக் காணப்படுகிறது. இங்குள்ளது போன்று ஞாயிறு தினங்களில் தேவாலயங்களுக்குச் செல்வது கூட அங்கு இல்லையென்றே கூறலாம்.

அங்குள்ள இந்துக் கோவில்களை நாம் வெளியில் இருந்த வாறு இலகுவில் அடையாளம் கண்டு கொள்ளமுடியாது. கோபுரம் போன்ற அமைப்புகள் இல்லை. ஆனால் உள்ளே மிக அழகாகப் பக்திபூர்வமான ஒரு சூழலைக் கொண்டதாக ஆலயமாக மாற்றி வைத்திருக்கின்றார்கள். பூஜைகள் மிக நேர்த்தியாக குருக்கள் மாரினால் ஆகம விதிப்படி நிகழ்த்தப்படுகின்றது. மேலும் மேல் மாடிகளில் கூட ஆலயங்களை அமைத்திருக்கின்றார்கள்.

*கேள்வி: அங்குள்ள எம் இந்துக்கள் கோவிலுக்குச் செல்வதில் விருப்புடையவர்களாக காணப்படு கின்றார்களா?*

பதில்: ஆம், எம் சைவத்தமிழர்கள் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் கோவிலுக்குச் சென்று வழிபாடுகளை நிகழ்த்தி வருகின்றார்கள். அதாவது அங்குள்ள மற்றவர்களைவிட எம்மவர்கள் கோவிலுக்குச் சென்று வழிபடும் தன்மை உயர்வாகவே காணப்படுகின்றது.

*கேள்வி: இந்துக்கோவில்களின் வருடாந்த உற்சவங்கள் பற்றிக் கூறுங்களேன்?*

பதில்: நான் அங்கு சென்றிருந்த போது, ரூரிங் என்ற இடத்தில் உள்ள ஓர் இந்துக் கோவிலில் திருவிழா நடைபெற்றது. பூங்காவன திருவிழாவன்று அங்கு செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அங்கே கொடியேற்றி திருவிழா செய்கிறார்கள். தேர்த் திருவிழாவையும் சிறப்பாக நிகழ்த்துகின்றார்கள். அங்குள்ள விக்கிரகங்கள், எழுந்தருளி விக்கிரகங்கள் எல்லாம் இங்கு போலல்லாது மிகப் பெரியவையாக இருப்பதை நான் அவதானித்தேன். அனேகமாக இந்திய வழிபாட்டு முறைகள் கோவில்களில் செல்வாக்குச் செலுத்துவதாகவே உணர்கின்றேன்.

*கேள்வி: அங்குள்ள எம்மவர்களின் உணவுக்கலாசாரம் பற்றிக் கூற முடியுமா?*

பதில்:அங்கே நான் உறவினர்களுடன் தங்கியிருந்தபோது அவதானித்தேன். அவர்கள் எமது முறையிலேயே உணவுகளைத் தயாரித்து உண்கிறார்கள். அவர்களது பிளளைகள் கூட எமது உணவுப பழக்க வழங்கங்களில் ஈடுபாடு காட்டுகிறார்கள். எனினும் பிள்ளைகள் வெளியே செல்லும் போது அந்த நாட்டிற்குரிய உணவு வகைகளை உண்ணும வழக்கத்தினையும் கொண்டிருக்கிறார்கள்.

மேலும் நான் அங்கிருந்த போது பலர் தமது வீட்டிற்கு அழைத்து விருந்தளித்தார்கள். எமது யாழ். மணணிலே எவ்வாறு பாரம்பரிய முறையில் உணவுகள் செய்து விருந்தளிப்பார்களோ அதே போல அவர்களும் உணவுகளைப் பரிமாறினார்கள்.

*கேள்வி: நீங்கள் அங்கு சென்றிருந்தபோது உங்கள் நினைவில் நிற்கின்ற குறிப்பிடக்கூடிய சம்பவங்கள் ஏதேனும் உண்டா?*

பதில்:நான் அங்கு சென்றிருந்த போது தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் (TSSA) என்ற அமைப் பின் ஏற்பாட்டில் கால்பந்து போட்டி நடை பெற்றது. இறுதிப்போட்டிக்கு என்னை பிரதம விருந்தினராக அழைத்திருந்தார்கள். TSSA அமைப்பிலே இலங்கையின் வட பகுதியில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளின பழைய மாணவர்கள் தமது பாடசாலையின் பெயரில் கழகங்களை உருவாககியிருக்கிறாாகள். உதாரணமாக கொக்குவில் இந்து கால்பந்தாட்ட அணி ஒன்று அங்கு உள்ளது. அதில் பல வயதுப்பிரிவுகளும் உள்ளன. இவ்வாறு 40 இற்கு மேற்பட்ட பாடசாலைகளின் பெயர்களைக் கொண்ட பாடசாலை பழைய மாணவர்களாலும் அவர்களின் பிள்ளைகளாலும் உருவாககப்பட்ட கழகங்கள் இந்த TSSA இல் அங்கம் வகிக்கின்றன.

கால்பந்தாட்ட இறுதியாட்டத்திலே மகாஜனா கல்லூரி அணியும் வவுனியா மகாவித்தியாலய அணியும் மோதின. இதில் வவுனியா மகாவித்தியாலய அணியினர் வெற்றிபெற்றனர்.

*கேள்வி: இறுதியாக உங்கள் மனதினை நெகிழ வைத்த சம்பவங்கள் ஏதேனும் இருக்கின்றதா?*

பதில்: ஆம், நான் TSSA யினது கால்பந்தாட்டப் போட்டி நிகழ்வில கலந்துகொண்டு உரையாற்றும் போது பார்த்தேன், அங்குள்ள இளையவர்கள் குறிப்பாக இங்கே பல கஷ்டங்களை போர்க்காலங்களில் அனுபவித்துவிட்டு அண்மைக் காலங்களில் அங்கே சென்றவர்கள். தமிழ் மண் தமிழீழம் எனும் வகையில் தம் பற்றுக்களை உணர்சசிபூர்வமாக வெளிப்படுத்தினார்கள்.

உதாரணமாக இங்குள்ள சில இடங்களை நான் குறிப்பிட்டுக் கூறும்போது தமிழீழம் என்று சொல்லுங்கள், தமிழ் அன்னை என்று கூறுங்கள் எனத் தமிழ்ப் பற்றை உணர்வுபூர்வமாக வெளிப் படுத்தினர். என்னை நெகிழவைத்த முக்கிய சம்பவமாகும்.

# யாழ்.போதனா வைத்தியசாலையில் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டதால் குருதித் தேவை அதிகரிப்பு

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த சில மாதங்களில் புதிய சிகிச்சை முறைகள் ஆரம்பமானதால் யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு இரத்த தேவை பன்மடங்காக அதிகரித்துள்ளதாக வைத்திய கலாநிதி உமாசங்கர் தெரிவித்துள்ளார்.

யாழ்.போதனா வைத்திய சாலையில் எலும்பு முறிவு நெறிவு சிகிச்சைப்பிரிவு, புற்றுநோய் சிகிச்சைப்பிரிவு, சிறுநீரக சிகிச்சைப பிரிவு போன்ற புதிய சிகிச்சை பிரிவுகள் கடந்த சில மாதங்களில ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் யாழ. போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு மேலதிகமாக இரத்தம் தேவைப்படுகிறது.

இச் சிகிச்சைப் பிரிவுகள் ஆரமபிப்பதற்கு முன்னர் இரத்த வங்கியில் சராசரி 100பைந் இரத்தம் இருந்தால் போதுமானதாக இருந்தது. ஆனால் தற்போது சராசரி 300 பைந் இரத்தமாவது எமது இரத்தவங்கியில் இருக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதனால் யாழ்.போதனா வைததியசாலையின் இரத்தவங்கியானது பல்வேறு இடங்களிலும் நடமாடும் சேவையினை மேற்கொண்டு தன்னார்வ இரத்த தானக கொடையாளிகளிடம் இருந்து இரத்தத்தைப் பெற்று வருகின்றது. அத்துடன், சில மன்றங்கள், சங்கங்கள், பாடசாலைகள் தாமாகவே முன்வந்து இரத்ததானம் வழங்கி வருகிறார்கள். உதாரணமாக சென்ற மாதம் நீர்வேலி இந்து இளைஞர் மன்றத்தைச் சேர்ந்த பலர் தாமாகவே முன்வந்து இரத்த தானம் வழங்கினார்கள். இதே போன்று சென்றவாரம் கியூடெக் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட கண்காட்சியின் போது இந் நிகழ்வை பார்வையிட வந்த 17 பேர் இரத்ததானம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ் வாறு சில பாடசாலைகளும் இரத்ததானம் வழங்கியுள்ளது.

அண்மைக் காலமாக யாழ்ப் பாணத்தில் பணத்திற்காக இரத்தம் கொடுக்கும் நடைமுறை இருந்துவருகின்றது. முன்னர் 30 வீதமானவர்களே தன்னார்வ தொண்டின் அடிப்படையில் இரத்த தானம் கொடுக்க முன்வந்தனர். ஏனைய 70 வீதமானோர் பணத்திற்கு இரத்தம் கொடுப்பவர்களாகவே இருந்தனர். ஆனால் தறபோது 50 வீதமானவர்கள் தன்னார்வ தொண்டின் அடிப்படையில் இரத்தம் கொடுப்பதற்கு முன் வந்துள்ளார்கள் எனவும் வைத்திய கலாநிதி தெரிவித்தார்.

பலர் பயம், தெளிவின்மை காரணமாகவே இரத்ததானம் வழங்குவதில் தயக்கம் காட்டுகிறார்கள் எனவும் உண்மையில ஒழுங்கான குருதித்தன்மை தொடர்ச்சியான தவணை முறைகளில் செய்யப்படுவதனால் குருதி வழங்கலின் பின்னர் நுண் குருதிச் சுற்றோட்டத்தில் ஏற்படும வினைத்திறனால் உடலில் புத்துணர்ச்சி ஏற்படுகின்றது.

அத்துடன், குருதி வழங்கலிற்கு முன்னராக மருத்துவ ரீதியான உடற் பரிசோதனைகளும், குருதி மாதிரியில் செய்யப்படும் இரத்தப் பரிசோதனைகளும் தங்கள் உடல் நலம் தொடர்பான பொதுவான நிலையை இலவசமாக அறிய உதவுகின்றன. மேலும், குருதித் தானம் செய்வதனால் கொலஸ்திரோல் அதிகரிப்பால் ஏற்படும் மாரடைப்பிற்கான சாத்தியங்கள் ஒப்பீட்டளவில் குறைவதாக ஆய்வுகள் உறுதி கூறுகின்றன. குருதி வழங்கலின் பின்னர் குருதிக் கூறுகளை உற்பத்தி செய்யும் என்பு மச்சைகளின் தொழிற்பாடு புத்துயிர்ப்பு அடைதல் போன்ற பல நன்மைகள் ஏற்படுகின்றன. இதனால் குறிப்பிட்ட அளவுகளில இரத்ததானம் வழங்குவதன் மூலம் தங்கள் உடல் நலத்திற்கு எவ்வித தீங்கையும் ஏற்படுத்தப் போவதில்லை. ஆகவே தன்னார்வத் தொண்டின் அடிப்படையில் இரத்ததானம் வழங்குதற்கு முன்வர வேணடும் என வைத்திய கலாநிதி உமாசங்கர் கேட்டுள்ளார்.

(அ!)

## இன்று ஒரு தகவல்

# தந்திரம்!

இன்றைய உலகில் எதற்கும் தந்திரம் வேண்டும் என்பது பலரதும் அபிப்பிராயம். தந்திரம் என்பது உபாயம் எனவும் பொருள்படும்.

நாடாள்வோர் முதல் நாட்டாண்மைக் கூலி வேலை செய்பவர் வரை தந்திரமாகச் செயல்பட விரும்புவதைக் காணலாம்.

மேல் மட்டத்திலுள்ளவர்களின் தந்திரமான போக்குகளை இராச தந்திரம் எனப் பெருமையுடன் கூறுபர்கள் கீழ்மட்டத்தில் உள்ளவர்களின் தந்திரமான போக்குகளைக் குள்ளத்தனம், நரித்தனம் என்றெல்லாம் கூறுவார்கள்.

பறவைகளில் காகத்தையும், மிருகங்களில் நாயையும் தந்திரமிக்கதாகச் சொல்வார்கள். தந்திர புத்தியுள்ள மனிதரை நரிக்கும், காகத்திற்கும் ஒப்பிட்டுப் பேசுவதை நாம் காணலாம். இந்தத் தந்திரமான செயற்பாடுகளில் நிபுணத்துவம் பெற்றவர்களை எல்லோரும் புகழ்ந்தாலும், அவர்களிடம் நம்பிக்கை வைப்பது அரிதாகும்.

உலகத்திற் பெரும் இராச தந்திரிகள் எனப் போற்றப்படுபவர்கள் எல்லாம் காலம், இடம், நேரம் அறிந்து சமயோசிதமாகச் செயற்படும் வல்லமையு டையவர்களேயன்றி பிறரின் நம்பிக்கைக்குரியவர்களாயிருப்பதில்லை.

இந்தத் தந்திரம் என்னும் திறமை எல்லோருக்கும் எல்லா நேரத்திலும் வெற்றியையோ, காரிய சித்தியையோ கொடுப்பதில்லை. இப்படித் தந்திரம் தோல்வியுறும்போது தான் "தந்திரம் தனக்கே அந்தரம்" எனக் கேலிக்குரியதாகிவிடுகின்றது.

இதை நன்கு அறிந்து அனுபவப்பட்டவர்களே எல்லா நேரமும், எல்லா இடத்திலும், எல்லோருடனும் தந்திரத்தைப் பிரயோகிக்கக் கூடாதெனக் கூறுவார்கள். தந்திரசாலிகள் எப்போதும் தாம் சந்தேகம் உடையவர்களாயிருப்பதுடன், பிறர்க்கும் சந்தேகியாகவே காணப்படுவதுண்டு.

மேலும் இவர் கள் தம் பேச்சில் சரியான உறுதிப்பாடு இல்லாது, பார்ப் போம், முயற்சிப்போம்,யோசிப்போம் என்றவாறான சொற் களையே பிரயோகிப்பார்கள்.

இன்று வாழ்க்கையில் ஏற்படும் அவ்வப்போதைய நிலைகளுக்கு ஏற்பத் தந்திரமாகவும், சமயோசிதமாகவும் காரியங்களைச் சாதிப்பதில் மக்கள் பெரும்பாலும் ஈடுபடுவதனால் அதன்பின் விளைவுகள் பெரும் ஏமாற்றங்களையும்,துன்பங்களையுமே ஏற்படுத்தி விடுகின்றது.

"பஞ்சதந்திரக் கதைகள்" நம் முன்னோர் தந்திரத்தால் ஏற்படக்கூடிய ஏமாற்றம், தோல்வி, அபகீர்த்தி என்பவற்றை எமக்குப் புகட்டி நல்லறிவூட்டும் வகையில் எழுதப்பட்டனவாகும்.

இக் கதைகளை வாசிக்குமிடத்து தந்திரமான செயல்களைச் செய்யக்கூடாது என்பதை நாம் நன்கு உணரக் கூடியதாகவுள்ளது,

தந்திரமரகக் காரியங்களைச் சாதிக்க முயல்பவர்கள் தெரிந்துகொள்ள வேண்டியது, சிலரைப் பலகாலம் ஏமாற்றலாம்.பலரைச் சில காலம் ஏமாற்றலாம் ஆனால் எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்றமுடியாது என்பதாகும்.

சில அரசியல்வாதிகள் மூலம் இதனை நாம் யதார்த்த பூர்வமாக உணரமுடிகின்றது.

**நீர்வைமணி**

# போதைப்பொருள் கடத்தலில் புலிகளுக்கு தொடர்பில்லை

தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு கடத்தப்படுகிற போதைப் பொருள்களுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று இந்திய அரசின் போதைப்பொருள் தடுப்புத்துறையின் மண்டல இயக்குநர் சங்கர் ஜிவால் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சென்னையிலிருந்து வெளியாகும் டொக்கான் குரோனிக்கல் ஆங்கில நாளேட்டுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே இதனைத் தெரிவித்தார்.

தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் போதைப் பொருள்களை கடத்தியதற்கான எதுவித சான்றும் இதுவரை கிடைக்கவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவதாக பலர் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அதை நிரூபிக்கும் ஆவணங்கள எதையும் அவர்கள் பெற்றிருக்கவில்லை. புலனாய்வுத்துறையும் இது தொடர்பில் தகவல் தரவில்லை என்றார்.

கடந்த ஜனவரி முதல் ஓகஸ்ட் மாதம்வரை போதைப்பொருள் கடத்தியதாக தமிழ்நாட்டில் 54 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 19பேர் இலங்கையைச் சேர்ந்தவர்கள். மற்ற அனைவரும் இந்தியர்கள். இந்த ஆண்டு காலத்தில் 72 கிலோகிராம் போதைப்பொருள் கடத்தப்பட்டுள்ளது. இதில் 275கிராம் மட்டும் தான் மாலைதீவிற்கு கடத்தப்பட இருந்தது. மற்ற அனைத்தும் இலங்கைக்குத்தான் கொண்டுசெல்ல திட்டமிடப்பட்டிருந்தது. போதைப்பொருள் கடத்தலில் இலங்கை கேந்திரமாக விளங்குகிறது.

இதுவரை நிலப்பரப்பில்தான் போதைப்பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டது. அண்மையில் படகு மூலம் இலங்கைக்கு கடத்தப்பட இருந்த போதைப் பொருளை இந்திய கடற்படை உதவியுடன் முதன் முறையாக இந்திய போதைப் பொருள் தடுப்பினர் பறிமுதல் செய்துள்ளனர். (த-4)

# பட்டிருப்பு அரசியல் பணிமனை மீதான தாக்குதல் விசேட அதிரடிப்படையின் உதவியோடு நடத்தப்பட்டது

## கமலக்கண்ணன் குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

தமது அரசியல்துறை அலுவலகம் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை தாக்குதல் நடத்திய ஆயுதக் குழுவினர் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை முகாமிலிருந்தே வந்தவர்கள் என்று விடுதலைப் புலிகளின் பட்டிருப்பு கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கமலக்கண்ணன் குற்றம்சாட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பட்டிருப்பு கோட்ட அரசியல்துறை அலுவலகம் மீது ஞாயிற்றுக்கிழமை காலை ஆயுதக் குழுவொன்றினால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு மற்றும் கைக்குண்டு தாக்குதல் சம்பவத்தல் லெப்டினன்ட் அருள்நேசன் எனப்படும் சின்னததம்பி ரவிராஜ் (வயது-20) துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இச்சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் பட்டிருப்பு கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மேலும் கூறுகையில்,

சம்பவம் நடந்த நேரம் சுமார் காலை 6.30மணி இருக்கும் நான் உட்பட நான்குபேர் அரசியல்துறை அலுவலகத்திலிருந்தோம். நாங்கள் தேநீர் அருந்திக் கொண்டிருக்கையில் பின்பக்கமாக நின்ற போராளி குறிப்பிட்ட ஆயுதபாணிகளின் வருகையை அவதானித்து ஓடிவந்தார். அந்த ஆயுதபாணிகள் இருவரும் சைக்கிளிலேயே வந்திருந்தார்கள்.

அந்நேரம் இதனை அவதானித்த நாங்கள் தப்பியோடிய சமயம் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் எமது போராளி லெப்டினன்ட் அருள்நேசன் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இச்சம்பவத்தைப் பொறுத்தவரை குறிப்பிட்ட ஆயுதபணிகள் இலங்கை அரசுடன் இணைந்து செயல்படும் தேசவிரோதக் குழுவினர். இச்சம்பவமானது விசேட அதிரடிப்படையின் ஒத்துழைப்புடன் நடததுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் தாக்குதல் முடிந்த பின்பு சுமார் 20 நிமிடங்கள்வரை தங்கியிருந்து உடமைகளை தீ வைத்தும், நொறுக்கியும் சேதப்படுத்தியுள்ளார்கள். பின்பு வந்த திசையில் திரும்பாமல் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளார்கள்.

விசேட அதிரடிப்படையினர் குறிப்பிட்ட நபர்கள் சென்ற பின்பு தான் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு வந்தனர். உரியநேரத்தில் வந்திருந்தால் அவர்களை சுட்டுக் கொன்றிருக்க முடியும் அல்லது கைது செய்திருக்க முடியும். அவர்கள் அப்படிச் செய்யவில்லை என்றார்.

இதற்கிடையில் இச்சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு நீதிபதி வினோபா இந்திரன் குறிப்பிட்ட இடத்தையும், சடலத்தையும் நேரில் சென்று பார்வையிட்டதோடு மரண விசாரணையையும் மேற்கொண்டார். மரண விசாரணையின் பின்பு வீரச்சாவைத் தழுவிக் கொண்ட போராளியின் வித்துடல் விடுதலைப் புலிகளால் பொறுப்பேற்கப்பட்டது. போர் நிறுதத்க் கண்காணிப்பாளர்களும் இது தொடர்பாக விசாரணையை நேரில் சென்று மேற்கொண்டனர்.

24 மணிநேரமும் விசேட அதிரடிப்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்பிற்கு உட்பட்ட பகுதியிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (த)

# ஒட்டுப்படைகளின் இருப்பும், ஆயுதச் செயற்பாடுமே தற்போதைய அமைதி முயற்சிகளுக்கு எதிரிகள்

## மட்டு.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

(மட்டக்களப்பு)

ஒட்டுப்படைகளின் இருப்பும், அவர்களின ஆயுதச் செயற்பாடுகளும் தற்போதைய அமைதி முயற்சிகது எதிரிகள் என்பதை சர்வதேச சமூகத்துக்கு உணர்த்த வேண்டிய பொறுப்பு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்குரியது என்பதை தமிழீழ விடுதலைப் புலிகள் வலியுறுத்தியுள்ளனர். யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருடன் நேற்று முன்தினம் கொக்கடடிச்சோலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற அவசர சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப பொறுப்பாளர் இளந்திரையன் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

பிரதானமாக படையினரின் சோதனைச் சாவடிகளில் நிரந்தரமாக கண்காணிப்பாளர்களை நிறுததுமாறும் இளந்திரையன் கோரிக்கை விடுத்துள்ளார். மடடக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையனுக்கும்,யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்குமிடையிலான சந்திபபில் தலைமை அதிகாரி மைக்சொரன் சன், மட்டக்களப்பு மாவட்ட துணைத் தலைமைப் பணிப்பாளர் டொமி லெக்மியர், அவரின் அலுவலக அதிகாரியும் மட்டக்களப்பு மாவட்ட கண்காணிப்புக் குழுவின் பதில் பணிப்பாளருமான எரிசபெத் ஆகியோர் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதில் மட்டக்களப்பு மாவட்ட சமாதான இணைப்பாளர் மனோஜ்ஜும் கலந்துகொண்டார். இளந்திரையன் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினர் நிறுவிவரும் காவல் அரண்கள் மற்றும் சோதனைச் சாவடிகளில் மககள் துன்புறுத்தலுக்குள்ளாகும் நிலைமை பற்றியும் மற்றும் விடுதலைப் புலிப் போராளிகள் அரச தரப்பால் நடத்தப்படும் அல்லது நோக்கப்படும் விதம் பற்றியும் நாம் அவர்களுக்கு எடுத்துரைத்தோம்.

அத்துடன, விடுதலைப் புலிகளின் கடடுப்பாடடுப் பகுதியிலிருந்து படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு செல்லும் நுழைவாயில்களில் உள்ள இராணுவ காவரண்களில் நிரந்தரமான கண்காணிப்பாளரை நிறுத்துவதற்கான கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளோம்.

மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான கருத்துக்களை வெளியிட முனையும் வேளைகளில் இராணுவத்தால் பழிவாங்கப்படும் நிலை தோன்றியுள்ளது. இவ் அச்சத்தால் எங்களிடம் முறைப்பாடுகளை செய்கின்றனர். அத்துடன்,"யுத்தம் தொடங்கினால் உங்களை ஒரு கை பார்ப்போம்" என விசேட அதிரடிப்படையினர் அச்சுறுத்தி வருவதாகவும் எங்களிடம் முறையிடும் நிலையில் அது தொடர்பாக கவனம் எடுக்குமாறும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் விளக்கியுள்ளதோடு அரச படைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலகளின் அரசியல் சந்திப்புக்களுக்கு விசேட அதிரடிப் படையினர் மறைமுகமாகவும் நேரடியாகவும் குழப்பம் விளைவித்து வருகின்றனர். இதுபற்றியும் கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்துள்ளோம்.

தற்போது விடுதலைப் புலிகள் கண்ணியமான முறையில் கடைப்பிடித்துவரும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசியல் சந்திப்புகளை மேற்கொள்கின்றபோது படைத்தரப்புக்கு பாதகமான நிலை ஏற்பட்டால் அதை உத்தியோகபூர்வமாக புலிகளின் சமாதான செயலகத்துக்கு இதுவரை அறிவிக்காதது ஏன்? என்றும் கேள்வியையும் எழுப்பியுள்ளோம்.

ஒட்டுப்படைகளின் இருப்பும், அவர்களின் ஆயுதச் செயற்பாடுகளும் தான் தற்போதைய அமைதி முயற்சிகளின் முக்கிய எதிரிகள் என்பதை பன்நாட்டு சமூகத்துக்கு உணர்த்தும் முழுப்பொறுப்பும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கே உள்ளது என்பதை வலயுறுத்தினோம். அதேவேளை, இது தொடர்பான எமது வினாக்கள் அனைத்துக்கும் பதில் அளித்ததுடன் மீண்டும் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் கண்காணிப்புக் குழுவினர் குறிப்பிட்டுள்ளனர் என இளந்திரையன் மேலும் தெரிவித்தார். (த)

# மனித உரிமை மீறல்களை விசாரிக்க தனியான குழு அமைப்பதே சிறந்தது

## கண்காணிப்புக்குழு யோசனை

(கொழும்பு)

யுத்தநிறுத்த காலத்தில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடாத்த தனயானதொரு குழு ஒன்றை அமைப்பதற்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு யோசனை தெரிவித்துள்ளது.

அண்மையில் வெளியிடப்பட்ட மனித உரிமைகள ஆணைய அறிக்கையில் வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் மனித உரிமை மீறல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் கண்காணிப்புக் குழுவினரால் அதைத் தடுத்து நிறுத்த இயலவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்தே, கண்காணிப்புக்குழு இவ் யோசனையைத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஓலப்ஸ்டொட்டிர் ஊடகமொன்றுக்கு நேற்று முன்தினம் விசேட செவ்வியளிக்கையில்,

யுத்த நிறுத்த மீறல்கள் குறித்த விசாரணைகளைத் தான் நாம் மேற்கொண்டு வருகிறோம். மனித உரிமை மீறல் விசாரணைகளை மேற்கொள்வதாயின அது நெடிய பணி, அதற்கான அதிகாரமும் உளகட்டமைப்பும் எம்மிடம் இல்லை. அதற்குத் தனியானதொரு குழு அமைப்பதே சரியானதாக இருக்கும்.

கண் காணிப்புக் குழுவிற்கு குறிப்பிட்ட சில அதிகாரங்கள் மட்டுமே உண்டு. மனித உரிமை மீறல் புகார்கள் வந்தால் நாம் அதுகுறித்து விசாரணை நடததலாம். ஆனால் அதற்குப் பிறகு என்ன நடக்கும்? அப்படியே இருக்கும்.

ஆகவே, தனிக்குழு அமைப்பதுதான் சரியானதாக இருக்கும் என அவர் தெரிவித்தார். (ற-4)

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளல்-2005

### பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவு

பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் குலுக்கல் அடிப்படையில் தெரிவானோரின் பெயர் விபரம் வருமாறு:-

1.கி/ப/103 திரு.செல்லத்துரை தங்கராசா
2.கி/ப/295 திரு.குமாரவேலு சேனாதிராசா
3.கி/ப/300 திரு.சதாசிவம் இரத்தினசிங்கம்
4.கி/ப/331 திருமதி.லீலாவதி கணபதிப்பிள்ளை
5.கி/ப/618 திரு.பெரியதம்பி மோகனராசன்
6.கி/ப/651 திரு.கந்தையா நீலையினார்
7.கி/ப/696 திரு.யோண் செல்வநாயகம்
8.கி/ப/747 திரு.சரவணமுத்து செல்வராசா
9.கி/ப/865 திரு.இராயப்பு மத்தியாஸ்
10.கி/ப/916 திரு.சின்னத்துரை வன்னியசிங்கம்

### பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவு

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மூப்பின் அடிப்படையில் தெரிவானோரின் பெயர் விபரம் வருமாறு:-

1.யா/பரு/24 திரு.நாகலிங்கம் செல்வானந்தம்
2.யா/பரு/28 திருமதி.யோகம்மா கதிரித்தம்பி
3.யா/பரு/30 திருமதி.சவுந்தரியம்மா காஞ்சிமாவடிவேல்
4.யா/பரு/45 திரு.செல்லையா சிவனடியார்
5.யா/பரு/47 திரு.சின்னத்தம்பி கிருஷ்ணசாமி
6.யா/பரு/64 திருமதி.சரஸ்வதி சாத்தாமுத்து
7.யா/பரு/76 திரு.சிவப்பிரகாசம் குமாரசாமி
8.யா/பரு/78 திருமதி.மாரிமுத்து சிவராசா
9.யா/பரு/81 திரு.ஐயாமுத்து இரத்தினசிங்கம்
10.யா/பரு/100 திரு.இராசமாணிக்கம் சிவலிங்கம்
11.யா/பரு/101 திரு.வயிரமுத்து சின்னராசா
12.யா/பரு/105 திருமதி.பாரிசாதம் இராசரத்தினம்
13.யா/பரு/120 திருமதி.சின்னத்தங்கம் இராசரத்தினம்
14.யா/பரு/130 திருமதி.மகாலெட்சுமி நாகரெத்தினம்
15.யா/பரு/136 திரு.இரத்தினவடிவேல் சோதிப்பிரமானந்தர்
16.யா/பரு/138 திருமதி.சம்பூரணம் கதிர்காமலிங்கம்
17.யா/பரு/146 திருமதி.சரஸ்வதிதேவி சிங்காரவடிவேல்
18.யா/பரு/154 திருமதி.நாகரத்தினம் இரத்தினசாமி
19.யா/பரு/158 திருமதி.பூரணம் இராசரெத்தினம்
20.யா/பரு/167 திரு.கந்தையா அழகையா
21.யா/பரு/169 திருமதி.எமிலிஎலிசபேத் பாக்கியநாதர்
22.யா/பரு/185 திரு.அருணாசலம் இராமலிங்கம்
23.யா/பரு/194 திரு.கிருஷ்ணசாமி சுந்தரலிங்கம்
24.யா/பரு/229 திரு.வெங்கடாசலம் சச்சிதானந்தவேல்
25.யா/பரு/235 திரு.குழந்தைவேலு வேலாயுதன்
26.யா/பரு/242 திரு.இரத்தினவடிவேல் இராமநாதன்
27.யா/பரு/252 திரு.சபாரத்தினம் இராமசாமி
28.யா/பரு/286 திரு.மயில்வாகனம் வெங்கடாசலபிள்ளை
29.யா/பரு/341 திரு.வைத்திலிங்கம் பொன்னம்பலம்
30.யா/பரு/346 திருமதி.சரஸ்வதி விசாகப்பெருமாள்
31.யா/பரு/379 திருமதி.தங்கப்பொன்னு சிங்கரத்தினம்
32.யா/பரு/382 திரு.நர்கமுத்து துரைசாமி
33.யா/பரு/392 திரு.தில்லையம்பலம் பரராசசிங்கம்
34.யா/பரு/404 திருமதி.சோதிப்பிள்ளை பொன்னுத்துரை
35.யா/பரு/407 திரு.சின்னத்தம்பி சந்திரசேகரம்
உங்கள் இராசிக்கு அர்த்தாஷ்டமச் சனி நடைபெறுவதால் சனிக்கிழமைகளில் எள் முடிந்த எண்ணெய் விளக்கினை ஏற்றி தொடர்ந்து காக்கைக்கு அன்னம அளிப்பது, சனி பகவான் சுலோகம், சனி காயத்ரி, சனி மந்திரத்தைத் தினமும ஒன்பது முறை ஜெபிப்பதும், ஸ்ரீ ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை, துளசி மாலை அணிவித்து வணங்கி வழிபடுவதும் அலைச்சலை படிப்படியாகக் குறைத்து ஏற்றமிகு பலனை உண்டாக்கும். பிரதோஷ வழிபாடு நல்ல பலனை ஏற்படுத்தும்.

(தொடரும்...)

# வீரப்பன் வாழ்வும் வதமும்

## மீள் பார்வை


என். சொக்கன் 13

ஆனால் வீரப்பன் அவருடைய கெஞ்சலைப் பொருட்படுத்தவில்லை. நாகப்பாவுக்கு செருப்பு அணியக் கூட நேரம் தராமல் அவரை அழைத்துக் கொண்டு விறுவிறுவென்று வெளியேறி நடந்தார்.

பரிமளாவும் அவர்களுக்குப் பின்னாலேயே ஓடிச் சென்றார். ஆனால் வீரப்பன் கும்பல் (தமிழில் பேசுவது எதுவும் அவருக்குப் புரியவில்லை. தன்னுடைய கணவரை ஏன் அழைத்துச் செல்கிறார்கள். அவரை என்ன செய்யப் போகிறார்கள் என்றெல்லாம் தெரியாமல் தவித்தார் அவர்.

அப்போது, நாகப்பாவின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டிருந்த காவலர் வீரப்பனின் கும்பலைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்தோடு அவர்களை நோக்கிச் சுட்டதாகத் தெரிகிறது. ஆனால் வீரபபனும் அவனுடைய கோஷ்டியினரும் ஏனோ திருப்பிச் சுடவில்லை. நாகப்பாவையும் அழைத்துக கொண்டு வந்ததுபோலவே நடை பயணமாகத் திரும்பிச் சென்றார்கள்.

நாகப்பாவின் குடும்பத்தினர் உடனடியாக காவல்துறையை தொடர்பு கொண்டு அவர் கடத்தப்பட்டிருக்கும் விபரத்தை தெரிவித்தார்கள். ஆனால் பொலிஸார் சுதாரித்து அங்கே வருவதற்குள் வீரப்பன் நெடுந்தூரம் சென்றிருந்தான்.



அவர்கள் நடந்து சென்ற வழியில் இருந்த ஒரு பண்ணை வீட்டில் நின்று தண்ணீர் குடித்தார்கள். அப்போது அங்கிருந்த வேலையாள் ஒருவரை அழைத்து 'நான் யார் தெரியுமா?' என்று மிரட்டலாக விசாரித்திருக்கிறான் வீரப்பன். குருஸ்வாமி என்ற அந்தத் தொழிலாளிக்கு நாகப்பாவை தெரிந்திருக்கிறது. ஆனால் வீரப்பனைத் தெரியவில்லை.

ஆகவே, 'தெரியாது' என்பதுபோல் தலையாட்டினார் அவர்.

நான் தான் வீரப்பன். என்னை டி. வியில் பார்த்ததில்லையா ந? என்று அதட்டிய வீரப்பன், குருஸ்வாமியிடம் ஒரு கேஸட்டைக் கொடுத்து அதை நாகப்பா வீட்டில் கொடுத்து விடும்படி சொன்னான். அங்கேயே நாகப்பாவுக்கு ஒரு செருப்பை கடன் வாங்கிக் கொண்டு அவர்கள் தொடர்ந்து நடந்தார்கள்.

அதன்பின் அந்த வழியாக வந்த ஒரு பேருந்தை மிரட்டி நிறுத்திய வீரப்பன் கோஷ்டி அதிலிருந்து மக்களை இறங்கச் செய்து சிறிது தூரம் பயணம் செய்தது. அப்போது தூரத்தில் ஒரு காவல்துறை வாகனத்தைப் பார்த்த வீரப்பன், தன்னுடைய குழுவினரை உஷார் படுத்தினான். ஆகவே அவர்கள் எல்லோரும் சட்டென்று அந்தப் பேருந்திலிருந்து இறங்கி காட்டுப் பகுதிக்கு நுழைந்துவிட்டார்கள்.

எல்லாம் ஒரு மணிநேரத்திற்குள் நடந்து முடிந்துவிட்டது. முன்னாள் அமைச்சர் நாகப்பா, இப்போது வீரப்பன் பிடியில்!

வழக்கம்போல் வீரப்பனின் கோரிக்கை கேஸட் அரசாங்கத்திற்கு சென்று சேர்ந்தது. அவர்கள் அதைப் போட்டுக் கேட்ட போது இரண்டு மாநில அரசுகளின் மீது வீரப்பன் கடும் கோபத்தில் இருப்பது தெரியவந்தது.

ராஜ்குமார் கடத்தல் விவகாரத்தின்போது தமிழ்நாடும் கர்நாடகமும் தனக்குக் கொடுத்த உறுதிமொழிகளை காப்பாற்றவில்லையென்று குற்றம்சாட்டிய வீரப்பன், இப்போது உடனடியாக அதையெல்லாம் சரி செய்யாவிட்டால் நாகப்பாவை கொன்று விடுவேன் என்று மிரட்டியிருந்தான்.

அப்படி என்ன செய்ய வேண்டும் வீரப்பனுக்கு?

முதலாவதாக வழக்கம்போல் இரு மாநில அதிரடிப்படையினரின் தேடல் வேட்டையை உடனடியாக நிறுத்த வேண்டும். அடுத்ததாக வீரப்பனின் நலம் விரும்பிகளான அப்பாவிகள் சிலர் சிறையில் வாடுகிறார்களாம். அவர்களையெல்லாம் விடுதலை செய்ய வேண்டும்.

இவை தவிர, தனக்கு வேறுசில முக்கியமான கோரிக்கைகள் இருப்பதாகவும் அவற்றை விரைவில் இன்னொரு கேஸட் மூலம் அனுப்புவதாகவும் வீரப்பன் சொல்லியிருந்தான்.

இதற்குள் நாகப்பா கடத்தலை முன்வைத்து கர்நாடக மாநிலத்தின் காங்கிரஸ் அரசுக்கு பல நெருக்கடிகள் உண்டாக்கப்பட்டன. ராஜ்குமார் கடத்தப்பட்ட போது உடனடியாக நடவடிக்கை எடுத்த அரசு, இப்போது நாகப்பாவை மீட்பதற்காக எதுவும் செய்யாமல் சுணக்கம் காட்டுகிறது என்று ஜனதா தளம் மற்றும் இதர எதிர்க்கட்சியினர் குற்றம்சாட்டினார்கள்.

இந்தக் குற்றச்சாட்டில் ஓரளவு உண்மையுமுண்டு. ஆனால் இந்த விஷயத்தில் கர்நாடக அரசு உடனடியாக செயற்பட்டு நடவடிக்கை எடுக்க முடியாமல் போனதற்கு வேறு சில காரணங்கள் இருந்தன.

அதில் முதலாவதும் முக்கியமானதுமான காரணம் நாகப்பாவை மீட்பதற்காக வீரப்பனிடம் தூதுசெல்வதற்கு யாருமே இல்லை!

ஏறகனவே, பல்வேறு கடத்தல் சம்பவங்களின் போது அரசுத் தூதுவர்களாக வீரப்பனை சந்தித்திருந்தவர்கள் அனைவரும் இப்போது சில நெருக்கடிகளில் சிக்கிக் கொண்டிருந்தார்கள்.

ராஜ்குமார் கடத்தலுக்கும் நாகப்பா கடத்தலுக்குமிடையே தமிழகத்தில் ஆட்சி மாறியிருந்தது. அப்பொழுது நடந்திருந்த பொதுத் தேர்தலில் தி. மு. க தோல்வியடைந்து அ. இ. அ. தி. மு. க ஆட்சியைப் பிடித்திருந்தது ஜெயலலிதா முதல்வராக இருந்தார்.

வீரப்பனின முதல் பேட்டியை வெளியிட்ட 'நக்கீரன்' பத்திரிகையின் நிருபரான சிவசுப்ரமணியம் வீரப்பனுக்கு உதவியதாக குற்றம்சாட்டப்பட்டு சிறையில் இருந்தார். அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் 'நக்கீரன்' கோபாலும் கைது செய்யப்படக்கூடுமென்று பேசப்பட்டது.

இதேபோல், ராஜ்குமார் கடத்தலின்போது தூதுவராக காட்டுக்குள் சென்ற பழநெடுமாறன் ஜெயலலிதா அரசால் பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார். இன்னொரு தூதுவரான கௌத்தூர்மணியும் வீரப்பன் கும்பலுக்கு ஆயுத உதவி செய்தது முதலான பல குற்றங்களுக்காக கைதுசெய்யப்பட்டு கர்நாடக சிறையிலிருந்தார்.

இந்தக் காரணங்களால் வீரப்பனை சந்திப்பதற்கு யாரும் காட்டுக்குள் செல்லத் தயாராக இல்லை. நமக்கு ஏன் வம்பு? என்று எல்லோரும் கும்பிடு போட்டு ஒதுங்கிவிட்டார்கள்.

தமிழக அரசும் இந்த விஷயத்தில் கர்நாடக அரசுக்கு ஒத்துழைக்க மறுத்தது. வீரப்பன் சொல்கிறான் என்பதற்காக தமிழக அதிரடிப்படையினரின் தேடல் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க முடியாதென்று கண்டிப்பாக மறுத்துவிட்டார் ஜெயலலிதா.

ஆகவே, கர்நாடக முதல்வர் எஸ். எம். கிருஷ்ணா அடுத்து என்ன செய்வது என்று புரியாமல் திகைத்துப் போனார். இனிமேல் வீரப்பனிடமிருந்து இன்னொரு கேஸட் வரவேண்டும் அதுவரை காத்திருப்பதைத் தவிர வேறுவழியில்லை.

நாகப்பா கடத்தல் தொடர்பாக வீரப்பனிடமிருந்து வந்த அடுத்தடுத்த செய்திகள், கோரிக்கைகள் கர்நாடக அரசுக்கு மேலும் நெருக்கடியை உருவாக்கின.

ஏனெனில், நாகப்பாவை விடுவிப்பது பற்றி தன்னிடம் பேசுவதற்கு கௌத்தூர்மணியையும் கொள்ளேகாலைச் சேர்ந்த ஐக்கிய ஜனதா தளத் தலைவர் பொன்னாச்சி மகாதேவசாமியையும் தான் தூது அனுப்ப வேண்டுமென்றான் வீரப்பன்.

இதுபற்றிக் கேள்விப்பட்டதும், முதலில் தயங்கிய பொன்னாச்சி மகாதேவசாமி, பிறகு காட்டுக்குள தூதுவராகச் செல்வதற்கு சம்மதித்தார். ஆனால் கௌத்தூர் மணி?

பெரியார் திராவிட இயக்கத்தைச் சேர்ந்த கௌத்தூர்மணியின் மீது கர்நாடக அதிரடிப் படையினர் பலவதமான வழக்குகளை பதிவுசெய்திருந்தார்கள். அந்த வழக்குகளின் அடிப்படையில் இப்போது சிறையிலிருக்கும் கௌத்தூர்மணியை எப்படிக் காட்டுக்குள் அனுப்ப முடியும்? *(தொடரும்)*

# ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்பை பெறும் தீவிர முயற்சியில் ஐ.தே.க

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்காக ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்பை பெற்றுக கொள்ளும் பொருட்டு உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தைகள் இன்று முதல் ஆரமபிக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

தற்போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்,ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளுடன் முதற்கட்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இக் கட்சிகள் மீது ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை இணக்கப்பாடு தொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியுடனும் உத்தியோக பூர்வமான பேச்சுவார்தைகள் இடம்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறைமை பாராளுமன்ற வாக்குரிமை மற்றும் அரசியல் அமைப்பு தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.

இனப்பிரச்சினை தொடர்பாக கட்சியின் நிலைப்பாட்டினையும் அதற்கான தர்வு தொடர்பாகவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க பேச்சுவார்த்தையின் போது தெளிவுபடுத்தியதாக ஐக்கிய தேசியக் கட்சியின பிரதிப பொதுச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று யுத்த நிறுத்த ஒப்பந்தம் மற்றும் நோர்வேயின் அனுசரணை என்பன குறித்தும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன. (த-9)

# பல்கலைக்கழகங்களை கண்காணிக்க விசேட செயற்திட்டம் நடைமுறை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் பல்கலைக்கழகத்தில் ஏற்படக் கூடிய நெருக்கடி நிலையைத் தடுப்பதற்கு விசேட செயற்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பாக அனைத்துப் பல்கலைக்கழக உபவேந்தர்களுக்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

அதன் அடிப்படையில் பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் பல்வேறு அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக கூடிய கவனத்துடன் இருக்குமாறும் உபவேந்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பல்கலைக்கழகங்களில் இடம்பெற்ற அசம்பாவித நிலைமையைக் கவனத்தில் கொண்டே இந்த முடிவிற்கு வந்ததாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (ர-9)

# வாக்காளர் அட்டைகள் செயலகங்களுக்கு அனுப்பி வைப்பு

(மட்டக்களப்பு)

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வாக்களிப்பதற்கு வேண்டிய வாககாளர் அட்டைகளை தேர்தல் திணைக்களம் சகல மாவட்ட செயலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

இதற்கமைய மட்டக்களப்பு மாவட்டத்திற்கான வாக்காளர் அட்டைகள் தேர்தல் திணைக்களத்தில் இருந்து வந்து சேர்ந்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் வேல்முருகு-சண்முகம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பணிகளில் மட்டக்களப்பு மாவட்ட தேர்தல திணைக்களப் பணிமனை ஈடுபட்டு வருவதாகவும் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள திகதி மற்றும் வேட்பு மனுத்தாக்கல் செய்யும் காலம் தொடர்பான அறிவுறுத்தல்கள் அறிவிக்கப்பட்ட பின்னர் வாக்காளர் அட்டைகளின் பதிவு வேலைகள் நடைபெறும் எனவும் அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (ர-9)

# உள்ளூராட்சி வாரம்

(கொழும்பு)

இந்த ஆண்டிற்கான உள்ளூராட்சி வாரம் எதிர்வரும் 12,13ஆம் திகதிகளில நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சேவைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்று சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அமைச்சரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் மூலமாக மக்களுக்கு நன்மை ஏற்படும் வகையில் செயல்திறன் மிக்க அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் நோக்கில் உள்ளூராட்சி வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

பிரதேச சபைகள், நகரசபைகள் மற்றும் மாநகரசபைகள் உட்பட 311 உள்ளூராட்சி மன்றங்கள் தற்போது இயங்கி வருகின்றன.

மேலும் 56 உள்ளூராட்சி மன்றங்களை புதிதாக நிறுவுவதற்கும் அமைச்சு திட்டமிட்டுள்ளது. (த-9)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வலைகள்

(மருதங்கேணி)

வடமராட்சி வடக்கு பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 167 கடற்றொழிலாளர்களுக்கு நோர்வே அரசின் உதவியுடன் கடந்த வெள்ளிக்கிழமை தும்பளையில் வைத்து 68 இலட்சம் பெறுமதியான வலைகள் வழங்கப்பட்டன.

நோர்வே அரசினால் வழங்கப்பட்ட இவ் வலைகள் ஏ.ஜே. நிறுவனத்தின் அனுசரணையுடன் அதன் படகு திருத்தும் நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டது. வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சமாச செயலாளர் க.சூரியகுமார் இந்நிகழ்வுக்கு தலைமை தாங்கினார்.

சுனாமியால் பாதிக்கப்பட்டு இதுவரை எந்த உதவிகளையும் பெறாத மீனவர்களுக்கும், மீன்பிடிவலைகள் இல்லாதவர்களுக்குமே இந்த சூடை வலைகள், அறக்கொட்டியாள் வலைகள் வழங்கப்பட்டன.

இதேபோல இன்றுமொரு தொகுதி வலைகள் வந்து சேர்ந்ததும் தெரிவு செய்யப்பட்ட 211 மீனவர்களில் மிகுதி 44 மீனவர்களுக்கு வலைகள் வழங்கப்படும் என ஏ.ஜே. நிறுவன வடக்கு-கிழக்கு இணைப்பாளர் கே.தர்மசீலன் தெரிவித்துள்ளார். (த-35)

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னீர
வைத்தூறு போலக் கெடும். - குறள்

வலம்புரி

# ஜே.வி.பியுடன் கூட்டுவைத்தால் சமாதானப் பேச்சு முறிவடையும்

நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்வதில் பிரத்மர் மகிந்த ராஜபக்ஷ மிகவும் ஆர்வமாகவே உள்ளார்.

எப்பாடுபட்டாவது ஜனாதிபதியாகவிட வேண்டும் என்ற ஆசையின் மேலெழுகையிலேயே ஜே.வி.பியுடன கூட்டுச்சேர்வதை மகிந்த ராஜபக்ஷ உயர்வாகக் கருதுகிறார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவு வழங்கிவிட்டு பின்னர் பொதுக் கட்டமைப்பு உடன் படிக்கையை சாட்டாக வைத்துக்கொண்டு அரசுக்கான ஆதரவை ஜே.வி.பி விலக்கிக்கொண்டது. தாம் விலகினால் அரசு கவிழும் என்ற எண்ணப்பாட்டில் இருந்த ஜே.வி.பிக்கு தமது எண்ணம் நிறைவேறாமல்போனமை கவலைக்குரியது. அமைச்சுப் பதவிகள், பிரதியமைச்சுக்கள் எல்லாவற்றையும் துறந்தும் பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை சைச்சாத்தாகியமை தனது கட்சிக்கு ஏற்பட்ட பெருந் தோல்வியாகவே ஜே.வி.பி கருதுகிறது.

அதேநேரம் மீண்டும் ஆளும்தரப்புடன் சேர்வதில் விருப்பிருந்தாலும் அதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒருபோதும் உடன்படப்போவதில்லை. இதனால் அவர் ஜனாதிபதியாக இருக்கும்வரையில் ஜே.வி.பி - சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறவோ அன்றி ஆளுங்கட்சிக் கூட்டோ சரிவராது என்பது உறுதியாகிவிட்டது. இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தல் விரைவாக ஏற்படவேண்டும் என்பதில் ஜே.வி.பி தீவிரமாக இருந்தது.

ஜனாதிபதித் தேர்தல் நடந்தால் அதில் சந்திரிகா குமாரதுங்க போட்டியிடமுடியாது. எனவே அந்த இடத்தில் போட்டியிடப்போவது பிரதமர் மகிந்த ராஜபக்ஷவே. அவ்வரைப் பொறுத்தவரை ஜே.வி.பியின் ஒரு நெருங்கிய நண்பராகவே இருந்துவருகிறார்.

அந்த நட்பு ஜே.வி.பி மீது கொண்ட அளவுகடந்த அன்புகாரணமாக அல்ல. மாறாக ஜே.வி.பியுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்தால் மட்டுமே அந்தக் கட்சியின் ஆதரவைப்பெற்று தான் ஜனாதிபதி ஆகிவிடமுடியும் என்ற நினைப்பிலாகும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை எதிர்த்தாலும் ஜே.வி.பியை எதிர்க்கக்கூடாது என்பதில் பிரதமர் தெளிவாகவே இருந்துவருகிறார். இது ஜே.வி.பிக்கும் ஜனாதிபதிக்கும் தெரிந்த விடயமே. இருந்தும் ஜே.வி.பியைப் பொறுத்தவரை பிரதமர் மகிந்தவுக்கு ஆதரவுவழங்கி அவரை ஜனாதிபதியாக்கிவிட்டால் இழந்துபோன அமைச்சுப் பதவியைப் பெற்றுவிடலாம் என்பது அவர்களின் திட்டம்.

ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பியின் ஆதரவைப்பெற்று அந்தப் பதவியில் அமர்ந்த பின்னர் ஜே.வி.பி துள்ளிக்குதித்தாலும் தன்னை எதுவும் செய்துவிடமுடியாது என்பது மகிந்தவின் திட்டம். இந்த முரண்பட்ட சிந்தனைகளுக்கு இடையில் அரசியலை நகர்த்துவது மிகவும் கடுமையான காரியமே. எதுவாயினும் நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஜே.வி.பி ஆதரவளிக்கப்போவது உறுதி. அதேசமயம் ஜே.வி.பியின் ஆதரவுக்காக அந்தக் கட்சியின் நிபந்தனைகளை மகிந்த ஏற்றுக்கொள்ளப்போவதும் உறுதியாகிவிட்டது. என்னதான் நடக்கும் நடக்கட்டுமே என்பது ஜனாதிபதி சந்திரகா குமாரதுங்கவின் நிலைப்பாடு.

11 வருடங்கள் ஜனாதிபதிப் பதவியில் இருந்துள்ளேன். இனிமேல் நமக்குத் தேவையென்ன? அரசியல்துறவு என்பதுபோல அவரின் பேச்சு அமைகின்றது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் நிறைவேற்று ஜனாதிபதியாக இருந்தவர்கள் அனைவருமே பின்நாளில் அரசியல்துறவு மேற்கொண்டதே யாதார்த்தம். அவ்வாறு அவர்களின் அரசியல் துறவோடு மக்களின் மனங்களிலிருந்து ஒதுக்கப்பட்டார்கள். இந்த நடைமுறைக்கு தான்மட்டும் விதிவிலக்கல்ல என்பதை அம்மையார் அவர்கள் நன்கு உணர்ந்திருப்பதனாலோ என்னவோ இருக்கின்ற ஒரு சில மாதங்களாவது அமைதியாக இருந்துவிட்டு போகலாமென எண்ணுகின்றார்போலும்.

அதனால் ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்தாலும் பரவாயில்லை என்ற நிலைப்பாட்டை அவர் எடுத்திருக்கவேண்டும். அல்லது ஜே.வி.பியுடன் கூட்டுச் சேரவேண்டாமென தான் கூறினாலும் அதனை மகிந்த கேட்கப்போவதில்லை என்ற காரணத்தினால்கூட அவர் மௌனம் காக்கலாம்.

எதுவாயினும் அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியின் ஆதரவுடன் ஜனாதிபதியாகப் பதவிக்கு வந்தால் சமாதானப் பேச்சுக்கள் முறிவடைவது சர்வநிச்சயம்.

# அமெரிக்க லூசியானா மாநிலத்தில் சூறாவளி அனர்த்தம் நிவாரணம் வழங்குவதில் அசமந்தம் ஊடகங்கள் சாடல்

உலகின் எபபகுதியில் பேரழிவு ஏற்பட்டாலும நிவாரணப் பொருட்களுடனும், மீட்புப் படையுடனும் உடனேயே பிரசன்னமாகும் அமெரிக்கா அதன் ஒரு பகுதியில் ஏற்பட்ட பாதிப்புக்களிற்கான நிவாரண உதவிகளை வழங்க முடியாத நிலையில தவித்துக் கொண்டிருக்கிறது.

“கத்தரினா” என்று பெயர் சூட்டப்பட்ட சூறாவளி லூசியானா மாநிலம் முழுவதையும் கடந்த திங்கட்கிழமை தாக்கியிருந்தது. குறிப்பாக நியூஓர்லியன்ஸ் மற்றும் அதன் சுற்றுப் பிரதேசங்கள் கடுமையான பாதிப்புக்குள்ளானதுடன் தொடர்ந்தும் தங்கியிருக்கும் வெள்ளம் மக்களின் போக்குவரததிற்கான வசதிகளை முற்றாகத் துண்டித்துள்ளது. இந்நிலையில் அப்பகுதிகளிற்கு சூறாவளி தாக்கி நான்கு நாட்கள் கடந்த பிற்பாடே நிவாரணப் பொருட்கள் சிறிது சிறிதாகச் செல்லத் தொடங்கியுள்ளன.

நியூஓர்லியன்ஸ் நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்கள் அமைந்திருந்த நிலப்பகுதி கடல் மட்டத்திற்கு கீழானதாக இருந்த காரணத்தால் கடல் பெருக்கெடுத்தால் வெள்ளம் ஏற்படும் அபாயம் அறியப்பட்ட ஒன்றாகவே இருந்து வந்தது. எனினும் மானிட எதிர்பார்ப்பிற்கு மாறான வகையில் நீரமட்டம் உயர்ந்ததோடு அணைகளில் ஏற்பட்ட உடைப்பு உட்பட பல இன்னோரன்ன காரணங்களால் அப்பிரதேசம் வெள்ளக்காடாகவே மாறியிருந்தது.

மேற்படி சூறாவளியால் ஏற்பட்ட அனர்த்தங்களில் இறந்தவர்களின் தொகை ஆயிரக்கணக்காக இருக்கலாம் என்று கருதப்படும் அதேவேளை, எந்தவித நிவாரணப் பணிகளும் உரிய நேரத்தில் முன்னெடுக்கப்படாததால் சடலங்கள் மீட்கப்படாமலும் நீரிலேயே மிதந்த வண்ணமுள்ளன. பல ஆயிரக்கணக்கானோர் மீட்பர்களை எதிர்பார்த்து உயரமான கட்டடங்களிலும் கூரைகளிலும் தங்கியுள்ளனர்.

சம்பவம் நடந்த மறுநாள் அமெரிக்க ஜனாதிபதி மேற்படி இயற்கை அழிவுப் பிரதேசத்தை விமானத்தில் சுற்றிப் பார்ததோடு ஒரு பத்திரிகையாளர் மாநாட்டையும் கூட்டியிருந்தார். அதில் மேற்படி பகுதிக்கான நிவாரணப் பொருட்கள் உடனேயே அனுப்பி வைக்கப்படும் என்றும் மேற்படி பிரதேசம் வெகுவிரைவில் வழ்மைக்குத் திரும்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்திருந்தார்.

எனினும், உதவிகள் எவையும் சென்றடையாமையானது மக்கள் மத்தியில் மிகுந்த பதட்டத்தையும் சிக்கல்களையும் சட்ட ஒழுங்குச் சீர்கேட்டையும் ஏற்படுத்தியிருந்தது. முற்றாகவே குடிநீரின்மை மற்றும் உணவுப் பொருட்களின்மை என்பவற்றோடு சுகாதாரச் சீரகேடு போன்றவையே இதற்கான முக்கிய காரணமாகும்.

இவ்வாறு உதவிப் பொருட்கள் தாமதமானதானது மக்களை அமெரிக்க அரசாங்கத்திற்கு எதிராக திருப்பிவிட்டுளளதோடு நிறவாதம் தொடர்பான பலத்த சர்ச்சைகளையும் எழுப்பியுள்ளது. குறிப்பாக ஜோர்ஜ புஷ மீதான கடுமையான வார்த்தைப் பிரயோகங்களை மக்கள் ஊடகங்களினூடாக வெளிபபடுத்தியதுடன், அரசின் பாகுபாடே உதவிகள் கிடைக்காமைக்கான காரணம் என்பதைத் தாம் நம்புவதாகவும் தெரிவித்தனர்.

ஊடகவியலாளர்களையே தங்களின் குரலாக நம்பும் பாதிகப்பட்ட மக்கள் அவர்களைச் சூழ்ந்த தங்கள் கவலைகளையும் வெறுப்புக்களையும் பகிர்ந்து கொண்டதை பல இடங்களிலும் காணக்கூடியதாக இருந்தது. அத்தோடு அமெரிக்காவின் பிரபல்ய நாளேடான “நியுயோர்க் ரைம்ஸ்” கூட புஷ்ஷின அசமந்தப் போக்கினைக கடுமையாகச் சாடியுள்ளது. குறிபபாக லூசியானா மாகாண ஆளுநர் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ஆகியோர் வியப்பிற்குரிய வகையில் இப் பேரழிவில் எதிர்பார்த்ததை வேகமாகச் செயற்படவில்லை என்ற உண்மையை சகல ஊடகங்களும் வெளியுலகின் பார்வைக்குக் கொண்டு வந்துள்ளன.

அலவபாமா,மிசிசிப்பி மற்றும் லூசியானாப் பகுதிகளிலுள்ள பல நகரங்களிலும் கறுப்பினத்தவர்களே பெரும்பான்மையாக இருப்பதாலும் இந்தப் பகுதிகளில் கடந்த காலங்களில் நிறவாதத்திற்கு உட்பட்டவை என்ற காரணத்தாலும் பாதிக்கப்பட்டவர்கள் பலரும் தாங்கள் கறுப்பினத்தவர்கள் என்ற காரணத்தினாலேயே தங்களிற்கு நிவாரணம் இன்னமும் வந்தடையவில்லை என நம்புவதாக ஊடகங்களிற்குத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க காங்கிரஸின் உறுப்பினர்களான கறுப்பினவர்களும் நிவாரணப்பணிகள் உரிய வேகத்தில் நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர். அதிலும் நியூஓர்லியன் நகர முதல்வர் அமெரிக்க அரசுத் தலைவர் புஷ் தொடர்பாகத் தெரிவித்துள்ள மிகக் கடுமையான கருத்துக்கள் அந் நகர மக்களின் ஆதங்கங்களைப் பிரதிபலிப்பனவாகவே அமைந்துள்ளன.

மக்கள் அகதிகளாகத் தங்கியுள்ள இடங்களிலும் மனிதக் கழிவுகள் தேங்கி அவையும் துர்நாற்றமாக உள்ளதாகவும் ஊடகங்கள் தெரிவித்துள்ள அதேவேளை, மேற்படி பிரதேசததின் நிர்வாக ஒழுங்குகளைப் பேணவும், நிவாரணங்களை மேற்கொள்ளவும் சுமார் 40,000 தேசிய பாதுகாப்புப் படையினரை அனுப்பும்பணிகள்தற்போது இடம்பெற்று வருகின்றன. (த)

# தேர்தல் சட்ட விதிகளை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்

## தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க

(கொழும்பு)

அரசியலமைப்பின் 17ஆவது திருத்தத்திற்கமைவாக தமக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை எதிர்வரும் தேர்தலின் போது கடுமையாக நடைமுறைப்படுத்த முடிவுசெய்திருப்பதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்திருக்கிறார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தல் காலத்தில் எந்தத் தரப்பிற்கும் பாராபட்சம் காட்டப்படமாட்டாது. தேர்தல சட்ட விதிமுறைளை மீறுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக கடுமையான ஒழுங்கு நடவடிக்கைகள எடுக்கப்படும்.

அரசியலமைப்பின் 17ஆவது திருத்தத்தின் 104(பிரிவு5ஈ)படி எனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் முழுமையாகக் கடைப்பிடிக்கப்படும். அரச மற்றும் தனியார் ஊடகங்கள் தேர்தல விதிகளை மீறாதிருப்பதற்காக தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை நியமிக்கத திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை சுதந்திரமாகவும் நேர்மையாகவும நடத்துவதற்கு தடைகள் ஏற்படுமானால் அவற்றைத் தடுப்பதற்காக படைத்தரப்பினரின் ஒத்துழைப்பு பெறப்படும். வேட்பு மனு ஏற்றுககொள்ளப்பட்ட நாள் முதல் வாக்களிப்பு முடியும் வரையிலான காலத்தில் காவல்துறையினரின் முழுமையான ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படும் என்றார்.

அதேநேரம்,தேர்தல் காலத்தில் அரச வளங்களை பரப்புரைகளிற்கு பயன்படுத்துவதை முற்றாகத் தடைசெய்திருப்பதாக கூறிய தேர்தல் ஆணையாளர், எந்த அரச அதிகாரியாவது அரச வளங்களைப் பயன்படுத்தி உதவுவாரானால் அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் எச்சரித்துள்ளார். (த)

# மூன்று கோள்கள் அருகருகே; வானில் இன்று தெரியும்!

வானத்தில் அவ்வப்போது அரிய காட்சிகள் தோன்றுவதுண்டு. அதேபோல் இப்போது வியாழன்-வெள்ளி ஆகிய கோள்களும சந்திரனும் அருகருகே தோன்றும் நிகழ்வு இன்றும்,நாளையும் நடைபெறும்.

இதுபற்றி பிர்லா கோலரங்க செயல் இயக்குநர் ஐயம்பெருமாள் கூறுகையில், சூரியனைச் சுற்றி கோள்கள் நீள் வட்டப்பாதையில் சுற்றுகின்றன.

பொதுவாக 12 இராசி மண்டலங்கள் வழியாக இவை நகர்ந்து செல்லும். இப்போது வியாழன் கோள் கன்னிராசி மண்டலத்தில் உள்ளது.வெள்ளி கோள் பூமிக்கும் சூரியனுக்குமிடையே சுறறி வருகிறது. எனவே அது எப்போதும் சூரியனுக்கு அருகில் தான் இருக்கும்.

இப்போது வியாழன் கோள் அருகிலேயே வெள்ளி கோள் காணப்படுகிறது.இக்காட்சியை இன்று மாலை 6.30மணியிலிருந்து 7.30க்குள் காணலாம். வானின் மேற்குத் திசையில் சூரியன மறைந்தவுடன் இவை இரண்டும் அருகருகே இருக்கும் காட்சியை வெறும் கண்ணாலேயே பார்க்கலாம். மிகவும் பிரகாசமாக தெரிவது வெள்ளி. அதற்கு சற்றுக கீழே ஒளி குறைந்து சித்திரை நட்சத்திரத்தையும் பார்க்கமுடியும.

இன்றும்,நாளையும் வெள்ளி,வியாழன் ஆகிய கோள்களும் சித்திரை நட்சத்திரமும் பிறை நிலவும் அருகருகே காணப்படும். இவை அனைத்தும் அருகருகே இருப்பதுபோல நமது பார்வைக்குத் தெரிந்தாலும் இவற்றுக்கிடையேயான தூரம் பல கோடி கிலோமீற்றர் ஆகும்.

பூமியிலிருந்து சந்திரன் சுமார் 3இலட்சத்து 52ஆயிரம் கிலோமீற்றர் தொலைவில் இருக்கும்.வெள்ளி 17கோடி கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது.வியாழன் 85கோடி கிலோமீற்றர் தொலைவிலும் சித்திரை நட்சத்திரம் 260ஒளி ஆண்டு தூரத்திலும் உள்ளது. ஒரு ஒளி ஆண்டு என்பது 9இலட்சம் கோடி கிலோமீற்றர் ஆகும என்றார். (த)

# ஐக்கிய தேசியக் கட்சியின் 59ஆவது மாநாடு இன்று

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் 59ஆவது ஆண்டு நிறைவு மாநாடு இன்று கட்சித் தலைமையகமான ஸ்ரீக்கொத்தாவில் நடைபெறவுள்ளது.

கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும் இந்த வருடாந்த மாநாட்டில் கட்சியின் உயர்பீட உறுப்பினர்களும் மாவட்ட தொகுதி அமைப்பாளர்களும் மற்றும நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கட்சியின் மூத்த தலைவர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இந்த மாநாட்டில் பாராட்டிக் கௌரவிக்கப்படவிருக்கின்றார்கள்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலையொட்டிய கட்சியின் விசேட மாநாடு ஒன்று எதிர்வரும் 17ஆம் திகதி கொழும்பு மாநகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் 15ஆயிரத்திற்கும் அதிகமான பேராளர்கள் கலநதுகொள்ள இருப்பதாக கட்சியின் பிரதிப்பொதுச் செயலாளரும ஊடகப் பேச் சாளருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துளளார்.

இந்த மாநாட்டின் போது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட இருப்பதாகவும் அன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முக்கிய உரை நிகழ்த்தவிருப்ப்தாகவும் அவர் மேலும தெரிவித்தார். (த-9)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



இந தப் பிரபஞ்சத்தின் சுக துக்கங்களைப் பற்றி யாருக்குக கவலை? இவற்றையெல்லாம் கடந்து துணிவுடன் செல்லுங்கள். பிரபஞ்சச் சட்டதிட்டங்களுக்கு அப்பால் விரையுங்கள். பிரபஞ்சம் முழுவதும் மறையட்டும தனியே நில்லுங்கள். நான் உண்மை-அறிவு-இன்பம்! நானே அவன் நானே அவன்.

சுவாமி விவேகானந்தர்

## கலந்துரையாடல்

(பொன்னாலை)

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் பற்றிய முக்கிய கலந்துரையாடலொன்று இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.இராசையா தலைமையில் இக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. (ச-49)

## முஸ்லிம்....

காங்கிரஸ் எடுக்கலாமென ஆய்வாளர்கள் கருத்துவெளியிட்டுள்ளனர்.

இதற்கிடையில் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து வெளியேறிச்சென்ற கிழக்கின் முக்கிய அரசியல் பிரமுகர்களும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுமான எம்.எம். ஏ.எம்.ஹிஸ்புல்லா மற்றும் ஹரீஸ் ஆகியோர் உள்ளிட்ட பலர் மீண்டும் அக்கட்சியில் இணையவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின் றது. (ச-4)

## துப்பாக்கிச்....

குறிப்பிட்ட சம்பவத்தையடுத்து அவ்விடத் திற்கு விரைந்த ஏனைய இராணுவச் சிப்பாய்கள் ஆத்திரமடைந்த நிலையில் பொது மக்களைத் தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதி சித்தாண்டியில் நேற்று முன்தினம் மாலை இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகிப் படுகாயமடைந்த ஆர்.ஏ.அனுரகுமார என்ற இராணுவச் சிப்பாய் நண்பகல் பொலநறுவை வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். (ச-4)

## மண்சரிவில் சிக்கி ஐவர் பலி

(கொழும்பு)

நாட்டில் சில இடங்களில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கனமழையினால் ஏற்பட்ட மண்சரிவினால் 5 பேர் உயிரிழந்துள்ளனர். இதன் காரணமாக மேலும் பலர் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கியுள்ளனர்

பலாங்கொடை ராகல தோட்ட பகுதியில் நேற்று அதிகாலை மண்சரிவு ஏற்பட்டு வீடு மீது விழுந்ததால் அந்த வீட்டிலிருந்த நால்வர் உயிரிழந்தனர்

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் இருபிள்ளைகள் இம்மண்சரிவிற்குப் பலியாகினர். இம் மண்ணில் புதை யுண்ட இவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டு பலாங்கொடை வைத்திய சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளன. மண்சரிவையடுத்து ராசகல்ல, கோணகும்புற, மீபாகம ஆகிய பிரதேசங்களிலிருந்து 40க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இரத்தினபுரி, களுத்துறை, பலாங்கொட ஆகிய பிரதேங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் பெருமளவான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இடம்பெயர்ந்தவர்களுக்கு உலர் உணவுகள் வழங்கப்பட்டு நிவாரண ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (ச-4)

## சமாதான....

திபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகி யோரைச் சந்தித்துக் கலந்துரையாடும் இவர், தமிழ்க் கூட்டமைப்புப் பிரதிநிதிகளையும் சந் தித்துப் பேசவுள்ளார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்திக்கும் வாய்ப்பு இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-4)

# சி.சு.கட்சியின் வேட்பாளர் மகிந்தவுக்கு...

ஆழிப்பேரலை பொதுக் கட்டமைப்பைக் கைவிடுதல், இலங்கை என்ற ஒற்றை ஆட்சியின் கீழ் இனப் பிரச்சினைக்குத் தீர்வு.

2002 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்தல்.

அமைதி முயற்சிகளில் நோர்வே அனுசரணையாளர் பங்களிப்பை மறுபரிசீலனை செய்தல் உள்ளிட்ட 12 நிபந்தனைகளை ஜே.வி.பி. விதித்துள்ளது.

ஜே.வி.பியினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகள் வருமாறு:

- ஆழிப்பேரலை மீளமைப்பிற்கான பொதுக் கட்டமைப்பை உயர் நீதிமன்றம் முடக்கிவைத்துள்ளது. முன்னைய பொதுக் கட்டமைப்பை கைவிட்டுவிட்டு ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளை அரசின் ஊடாக மேற்கொள்ளப்படும் வகையில் புதிய செயற்திட்டத்தை உருவாக்கவேண்டும்.
- இனப்பிரச்சினைக்குத் தீர்வு க்காண தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டுமல்லாது இதர கட்சிகளுடனும் அமைதிப் பேச்சுக்கள் நடாத்தப்படவேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தன்னாட்சி அதிகாரசபை உள்ளிட்ட எதுவித அரசியல் மற்றும் நிர்வாக அதிகாரங்களை அளிக்கும் வகையில் அப்பேச்சுக்கள் இருக்கக்கூடாது.
- இனப்பிரச்சினைக்கு முன் வைக்கப்படுகின்ற எந்தத் தீர்வும் இலங்கை என்கிற ஒற்றையாட்சிக் கோட்பாட்டை பாதுகாக்கும் வகையிலேயே அமையவேண்டும்.
- 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ரணில் விக்கிரமசிங்க உருவாக்கிய யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாக பரிசீலனை செய்யவேண்டும்.

இலங்கை அரசியல் சாசனத்திற்கு ஏற்பில்லாத, இலங்கையின் தேசிய பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவிக்கின்ற யுத்தநிறுத்த ஒப்பந்த சரத்துக்கள் அனைத்தையும் அதிலிருந்து முழுமையாக நீக்கவேண்டும்.

- அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே அனுசரணையாளராகச் செயற்பட்டுவரும் நோர்வேத் தரப்பினர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பக்கச்சார்பாகச் செயற்பட்டு வருகின்றனர். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைக் கண்காணிக்கும் பணியில் கண்காணிப்புக்குழு முழுஅளவில் தோல்வியடைந்துவிட்டது. இந்த நிலையில் அனுசரணையாளராக நோர்வே பணியாற்றுவது தொடர்பாக மறுபரிசீலனை செய்யவேண்டும்.
- தமிழீழ விடுதலைப் புலிகளால் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மனித உரிமைகள், ஜனநாயகம், சட்டம், ஒழுங்கு ஆகியவை முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினைகளை முதன்மைப் பணியாகக்கொண்டு இலங்கையில் மூவின மக்களும் எவ்வித அச்சமுமின்றி வாழ்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இந்த மாகாணங்களில் அனைத்து ஜனநாயகரீதியான அரசியல் கட்சிகளும் செயற்படும் வகையில் பல கட்சி அரசியல் முறையை மீளவும் செயற்படுத்த முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.
- இலங்கையின் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையானது இலங்கையின் ஜனநாயகத்தைச் சீர்குலைக்கக்கூடியது.

இந்த நிறைவேற்று அதிகாரங் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை நீங்குவதை முதன்மைப் பணியாக மேற்கொள்ள வேண்டும். இதை 2005 ஆம் ஆண்டு தொடங்கவுள்ள ஆறாவது ஜனாதிபதியின் பதவிக்காலத்தின் தொடக்கத்திலேயே செயற்படுத்தவேண்டும்.

- இலங்கையின் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்காக தாராளமயமாக்கல் பொருளாதாரக் கொள்கையை எந்தக் கட்சியும் ஏற்றுக்கொள்ளக் கூடாது.

இலங்கையின் தேசிய பொருளாதாரக் கொள்கையானது சமச்சீரான பொருளாதீரக் கொள்கையாக இருக்கவேண்டும்.

- தேசியப் பொருளாதாரத்தின் மையமாக விளங்குகின்ற துறைமுகங்கள், விமானத் தளங்கள், பெற்றோலியக் கூட்டுத்தாபனம், அரச வங்கிகள், இலங்கை மின்சாரசபை உள்ளிட்ட அனைத்து அரச நிறுவனங்கள் மற்றும் நீர், கனிம வளங்கள் ஆகியவற்றை தனியார் மயமாக்கக்கூடாது.

தனியார்மயமாக்கல் தொடர்பாக அரசசார்பில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் அனைத்து முயற்சிகளையும் கைவிடவேண்டும்.

- அனைவருக்குமான கல்வி உரிமை பாதுகாக்கப்படவேண்டும். கல்வியை தனியார் மயமாக்குகிற முயற்சிகள் மற்றும் 1981 இல் கல்வி தொடர்பான ஐக்கிய தேசியக் கட்சி தாக்கல்செய்த வெள்ளை அறிக்கை ஆகியவற்றைக் கைவிடவேண்டும். கல்வி மேம்பாடு குறித்து புத்திஜீவிகள், கல்வியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரது கருத்துக்களை கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும்.
- தேசிய உற்பத்திக்குப் பங்காற்றுகின்ற அனைத்துத் தரப்பு தொழிலாளர்கள், விவசாயிகள், வர்த்தகர்கள், தொழில்முனைவோர், நுகர்வோர் உள்ளிட்டோரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஜே.வி.பி முன்வைக்கிற செயல்திட்டங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும்.
- அரசின் வெளியுறவுக் கொள்கையானது அணிசேராக் கொள்கையாக இருக்கவேண்டும். வெளியுறவுக் கொள்கை குறிப்பாக தெற்காசியப் பிராந்தியம் மற்றும் ஆசிய நாடுகளுக்கான ஒத்துழைப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிற வகையில் இருக்கவேண்டும்.

இதேவேளை ஜே.வி.பியின் இந் நிபந்தனைகள் குறித்து மகிந்த ராஜபக்ஷ தரப்பிலிருந்து எதுவித கருத்துக்களும் வெளியிடப்படவில்லை.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கடந்த ஐந்து நாள் சீனப் பயணத்திற்குள்ளாகவே மகிந்த ராஜபக்ஷவும் ஜே.வி.பியினரும் பல சுற்று ரகசியப் பேச்சுக்களை அமைச்சர் மங்கள சமரவீர ஏற்பாட்டில் மேற்கொண்டனர். இந்த ரகசியப் பேச்சுவார்த்தைகளை அடுத்தே ஜே.வி.பி தனது நிபந்தனைகளுடனான ஆதரவை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான உயர்நீதிமன்றத் தீர்ப்பில் தமக்கு எதிராக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் அமைச்சர் மங்கள சமரவீரவும் செயற்பட்டது குறித்து மிகக் கடுங்கோபத்தில் இருக்கும் சந்திரிகா குமாரதுங்க, ஜே.வி.பியுடனான இந்த ரகசியப் பேச்சுக்கள் குறித்தும் அதிருப்தியில் இருப்பதாகவும் சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-4.9)


## மரண அறிவித்தல்



### நாகமுத்து பரராஜசிங்கம் (சொக்கர்)

புங்குடுதீவு மடத்துவெளியை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும்கொண்ட திரு.நாகமுத்து பரராஜசிங்கம் 02.09.2005 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் திருகோணமலை முன்னைனாள் வர்த்தகரும், சமூக சேவையாளரும் ஆவார். இவர் காலம்சென்றவர்களான நாகமுத்து செல்லமுத்து தம்பதிகளின் புதல்வரும், தில்லையம்பலம் செல்லமுத்து தம்பதிகளின் மருமகனும், சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், கனகலிங்கம் (தலைவர் புங்குடு தீவு, நயினாதீவு ப.நோ.கூ.ச), பாலசரஸ்வதி (கொழும்பு ), பாலசுலோசனா (கனடா), காலம்சென்ற பாலசுப்பிரமணியம், யோகேஸ்வரன் BACC.Hons (G.A கனடா), நிதீஸ்வரன்(கனடா), நதீஸ்வரன்(கனடா), பாணுரேகா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நாகேஸ்வரி, நவரத்தினசிங்கம் (கொழும்பு), தவேந்திரராசா (கனடா), அல்லி(கனடா), ஸ்ரீதேவி(கனடா), ரூபிகா(கனடா), ரமணன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலம் சென்றவர்களான கைலாயநாதர் (திருமலை உப்புவெளி பிரதேசசபை முன்னாள் தலைவர்) இராமலிங்கம் செல்லம்மா, கண்மணி, உலகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கலியுகா, கமல், நிர்மல் (பிரான்ஸ்), விமல், வித்தியா, விதுனா, தனுசியா, சிந்து, கௌசிகன், யமி, அனீரா, அஜன், நிதீசன், நிதீசா, றுனீஸ்சன், அபினிசா, ஆகியோரின் அன்புப் பேரனும் கனகம்மா, செல்லத்துரை, நமசிவாயம், இராசம்மா, சின்னத்தங்கம், கந்தையா, பொன்னாச்சி, சபாரெத்தினம் புஸ்பவதி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் (06.09.2005)இன்று செவ்வாய்க்கிழமை 3 மணிக்கு நடைபெற்று கோம்பயன் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

21, ஆனைக்கோட்டை வீதி,
குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில்.
T.P: 0776201567

தகவல்,
ப.கனகலிங்கம்(மகன்)
தலைவர் (யாழ். மாவட்ட விவசாயநுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், புங்குடுதீவு, நயினாதீவு ப.நோ.கூ.சங்கம்)

(9789)

## வேலைக்கு ஆட்கள் தேவை

ஸ்கிறீன் பிறிண்டிங், றெஜிபோம் பிறிண்டிங் செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. அனுபவமுள்ளவர்களும், பழக விரும்பு பவர்களும் சமூகம் தரலாம்.

### வள்ளி ஸ்கிறீன் பிறிண்டிங்

அருட்செல்வன்
கே.கே.எஸ். வீதி,
நந்தாவில் தாவடி.

T.P:021-4591158

(9867)

## திருமணக்கார் (குளிரூட்டியது) வாடகைக்கு



☆ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
☆ விசேட வைபவங்கள் ☆ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீனகார்கள், சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்.

தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை 22, சோமசுந்தரம் அவனியூ
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
T.P:0777-903090, 077-3086939,0777-246117, 077-6018467

(c-9843)

## நாதன்ஸ் சினிமா

குளிரூட்டப்பட்டது | யாழ்ப்பாணம்

சத்யராஜ், நமீதா நடித்த

### இங்கிலீஷ்காரன்

(வடிவேலின் கலக்கல் நகைச் சுவையுடன்)

கா.நே:10.30,2.30,6.30,9.30(பு.நே)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

கார்த்திக், ரோஜா, ரம்பா, விவேக் நடித்த

### சந்தித்த வேளை

கா.நே. : 11.00, 2.45, 6.00 (பு.நே)

## மனோகரா யாழ்.

ஜெயம் ரவி, ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த

### தாஸ்

கா.நேரம்: 10.30;2.30;6.30;9.30

அடுத்த வெளியீடு
சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த

### தொட்டிஜெயா


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.